# சிறுகதைத் தொகுப்பு

## [இக்கால இலக்கியம்] — புதுமைப்பித்தன்

## 1. கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்

புதுமைப்பித்தன்

**ஆசிரியர் குறிப்பு:—**

இயற்பெயர்: சோ. விருத்தாசலம்
வாழ்நாள்: 1906 – 1948
சிறுகதைத்தொகுதி: கபாடபுரம், புதிய ஒளி, சித்தி, அன்னை, அன்றிரவு, புதுமைப்பித்தன்சிறுகதைகள்

**கதைமாந்தர்கள்**

1. மேலகரம் மேலகராமசாமிப்பிள்ளை
2. கடவுள்
3. காந்திமதி அம்மையார்
4. திவான் பகதூர் ~~[illegible]~~ பிரகதீஸ்வர சாஸ்திரிகள்
5. பார்வதிதேவி.

**கதைச்சுருக்கம்:**

கடவுள் மனித வாழ்க்கையை வாழ்ந்து பார்க்க பூமிக்கு வருகிறார். மனிதர்களின் வாழ்க்கையையும் வாழ்ந்து பார்க்கிறார். இப் பூவுலகில் இவ்வளவு சோதனைகளா? என்று வியந்து "கூட இருந்து நீ வரம் தரலாம்! — உங்களோடு கூட இருந்து வாழ முடியாது." எனக்கடவுளே வெறுத்துப் பேசுகிறார்.

## 2. ராஜா வந்திருக்கிறார்

கு. அழகிரிசாமி

**ஆசிரியர் குறிப்பு:**

மலேசியாவில் இலக்கியவட்டம் நடத்தியவர்
முதல்சிறுகதை: உறக்கம் கொள்ளுமா
கதைகள்: சிரிக்கவில்லை, தவப்பயன், காலகண்டி, தெய்வம் பிறந்தது, இருசகோதரர்கள், கற்பகவிருட்சம் வரப்பிரசாதம், அன்பளிப்பு

சிறுகதைகள்: அண்மையில், புது உலகம், திரிபுரம், இருவேறுகள், திரிவேணி, சோமசுந்தரம்

**கதைமாந்தர்கள்:**

சிறுவன் ராமசாமி, சிறுவர்கள் - செல்லையா, தம்பையா, சிறுமி மங்கம்மாள், தாய் - தாயம்மாள், அநாதைச் சிறுவன் - ராஜா. ஜமீன்தார் ராஜா.

**கதைச்சுருக்கம்**

சிறுவன் ராமசாமிக்கும், சிறுவர்கள் செல்லையா, தம்பையா, சிறுமி மங்கம்மாள் இவருக்கும் இடையே எப்பொழுதும் சிறு சிறு வாக்குவாதங்கள் வருவதுண்டு. தத்தம் வீட்டுப் பெருமைகளைப் பேசிப் பெருமிதம் வந்தனர். ஒருநாள் ராமசாமி வீட்டுக்கு ஜமீன்தார் வருகிறார். அதே தினம் அன்று சிறுவர்கள் செல்லையா மற்றும் சகோதரர்கள் வீட்டிற்கும் ஒரு அநாதைச் சிறுவன் வருகிறான். இவர்கள் பெற்றோர் அந்தச் சிறுவனை ஒரு ராஜாவைப் போல உபசரிக்கிறார்கள்.

வழக்கம் போல் மறுநாள் ராமசாமி இவர்களிடம் எங்கள் வீட்டிற்கு ராஜா வந்தாரே! என்று கூற, இவர்களும், எங்கள் வீட்டிற்கும் ராஜா வந்தாரே! என்றார்கள்.

## 3. குறட்டை ஒலி — மு. வரதராசன்

**ஆசிரியர் குறிப்பு:**

பதினான்கு புதினங்கள், சிறுகதைகள், இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் எனப் பலதும் பல நூல்களையும் 13 புதினங்களையும் எழுதியுள்ளார். செந்தாமரை, கள்ளோ காவியமோ? மலர்விழி போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவரின் அகல்விளக்கு நாவல் சாகித்ய அகாதெமி பரிசு பெற்றது.

**கதைமாந்தர்கள்:**

மேல்மாடி கணவன்-மனைவி, கீழ்வீடு வடபாதி கணவன்-மனைவி, தென்பாதி ஏழைக் கணவன்-மனைவி மற்றும் 6 குழந்தைகள், ஒரு நாய்.

**கதைச் சுருக்கம்:**

வடபாதியிலிருக்கும் கணவன்மனைவிக்குக் குழந்தைகளில்லை. செல்வந்தர்கள். வீடு எப்பொழுதும் அமைதியாகவும் சுத்தமாகவும் இருக்கும். தென்பாதியிலிருக்கும் கணவன்மனைவிக்கு 6 குழந்தைகள், மேலும் வயிற்றில் ஒரு குழந்தை அதுவும் 7வதாகப் பிறக்கிறது. வீட்டில் ஒரு நாய் அதுவும் 5 குட்டிகள் போட்டது. அப்பொழுதும் ஒரே ஆரவாரமாக இருக்கும். இதனால் வடபாதி செல்வந்தர்களுக்கு இவர்களைப் பிடிக்காது. இவ்விரு குடும்பங்களையும் மேலிருந்து வேடிக்கை பார்ப்பதே மேல்மாடிக் கணவனுக்கு வேலை.

இரவு குட்டிகளை விடுத்து நாய் காணாமல் போய்விட்டது. குட்டிகளுக்குத் தன் தாய்ப்பாலை பசியால் நினைத்து குட்டிகளின் பசியைப் போக்குகிறாள் அந்த ஏழை வீட்டுத் தாய். சத்தம் கேட்காத அளவிற்கு சன்னல், கதவுகளை சாத்தி அடைத்து விட்டு உறங்குகிறது பணக்காரக் குடும்பம்.

இவ்வுலக வாழ்க்கையை நினைத்துப் பார்க்கிறார் மேல்மாடிக் கணவன்.

## 4. பொம்மை — ஜெயகாந்தன்

**ஆசிரியர் குறிப்பு:**

ஒரு கதைக் கருவை வைத்து பல நூல்கள் உருவாக்க வல்லவர். ஞானபீட விருது வென்றவர். இவரின் சில நேரங்களில் சில மனிதர்கள் எனும் நூலுக்கு சாகித்ய அகாதமி பரிசு வென்றார்.

சிறுகதைத் தொகுதிகள்: உதயம், ஒருபிடி சோறு, இனிப்பும் கரிப்பும், தேவன் வருவாரா?, சுமைதாங்கி, யுகசந்தி, புதியவார்ப்புகள், சுயதரிசனம், குருபீடம், சக்கரங்கள் நிற்பதில்லை.

சிறுகதைகள்: அக்கினிப் பிரவேசம், புதுச் செருப்புக் கடிக்கும், உண்மை சுடும், பிரமோபதேசம், ஒருபிடி சோறு, இருளைத்தேடி போன்றவை

புகழுரைகள்: சிறுகதை மன்னன், சிறுகதை வேந்தன், சிறுகதை ஜாம்பவான்

கதைமாந்தர்கள்:

சிறுமி சிவகாமி, தாய் ரங்கம்மாள், பணக்காரச் சிறுமி ராணி

கதைச் சுருக்கம்

சிறுமி சிவகாமி ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். தாய் தன் பச்சிளங்குழந்தையை சிவகாமியிடம் விட்டுவிட்டு வேலைக்குச் செல்வாள். பணக்காரச் சிறுமி ராணி வீட்டில் நிறைய பொம்மைகள் இருப்பதைப் பார்த்து ஏங்கித் தன் தாயிடம் கேட்பாள். அன்று தாய் வேலைக்குச் சென்றவுடன், தன் வீட்டில் இருக்கும் குழந்தையையே பொம்மை போல் நினைத்துக் குளிப்பாட்டி, பொட்டு வைத்து அழகு பார்க்கிறாள். ஏற்கனவே காய்ச்சலில் இருந்த குழந்தை இறந்துவிடுகிறது. வாசலில் பொம்மையுடன் தாய் நிற்கிறாள்.

5. புலிக்கலைஞன்

அசோகமித்திரன்

ஆசிரியர் குறிப்பு:

சமுதாயப் பிரச்சினைகளை மையமாக வைத்து நச்சென்று பதியவைக்கும் புதினங்களை எழுதுபவர். கரைந்த நிழல்கள், தண்ணீர், 18வது அட்சக்கோடு, ஆகாயத் தாமரை போன்றவை குறிப்பிடத்தக்க

புதினங்கள் ஆகும்.

கதைமாந்தர்கள்: சர்மா, பகர்பாயிட் காதர் மற்றும் சர்மாவின் உதவியாளர்கள்.

கதைச் சுருக்கம்

திரைத்துறையில் அடிமட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை கடின உழைப்பால் முன்னேறி வந்தவர் சர்மா. புலிவேசம் போட்டு நடிப்பதில் திறமையுடையவர் பகர்பாயிட் காதர். பகர்பாயிட் ஒரு நாள் சர்மாவிடம் நடிப்பதற்கு வாய்ப்பு வாங்கித் தருமாறு கேட்கிறார். முகவரி கொடுத்துவிட்டுப் போ, வாய்ப்பு வரும் பொழுது அழைக்கிறேன் என்கிறார். ஆனால், பகர்பாயிட் காதரோ - என்னிடம் நிலையான முகவரிகூட கிடையாது. ஆதலால் நீங்கள் உதவி செய்யுங்கள் என்று கூறுகிறார். ஒருவழியாக ராஜாராணி கதையை மையமாக வைத்து எடுக்கும் படத்தில் புலிவேடமிடக் கூறி வேலையைத் தொடங்கினார் சர்மா. தயாரிப்பாளர், ராஜாராணி கதை வேண்டாம் என்று படப்பிடிப்பையே ரத்து செய்கிறார்.

6. செவ்வாழை - அறிஞர் அண்ணா

ஆசிரியர் குறிப்பு: திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தவர், முதலமைச்சராய் இருந்தவர்.

சிறுகதைகள்: பலாபலன், அருமெஞ்சி, அன்னதானம், பேய் ஓடிப் போச்சு, இருபரம்பரைகள், இதாழ, செவ்வாழை, தஞ்சை வீழ்ச்சி, பிடிசாம்பல், புலிநகம், ராஜாதி ராஜா, சொர்க்கத்தில் நரகம்.

நாவல்கள்: குமரிக்கோட்டம், பார்வதி பி.ஏ., ரங்கோன் ராதா, கபோதிபுரக் காதல், குமாஸ்தாவின் பெண், கலிங்கராணி

நாடகங்கள்: நீதிதேவன் மயக்கம், சந்திரமோகன், ஓர் இரவு, வேலைக்காரி

இதழ்கள்: திராவிட நாடு, காஞ்சி

(6)

கதைமாந்தர்கள்: செங்கோடன் - குப்பி, மூத்தமகன் கரியன், கரியனின் தங்கை காமாட்சி, எதிர்க்குடிசை நல்லப்பன், பண்ணை மானேஜர் சுந்தரம், பண்ணை பரந்தாமமுதலியார், முத்துவிஜயா, மூன்றாவது பையன் முத்து

கதைச் சுருக்கம்

ஏழை விவசாயி செங்கோடன் ஒரு செவ்வாழை வளர்க்கிறான். தன் குழந்தைகளுக்கும் மேலாக அதை கவனித்து வருகிறான். அது அவன் போலவே அவன் மனைவி மற்றும் குழந்தைகளும் செவ்வாழையைப் பார்த்துப் பார்த்துப் பூரிப்படைகின்றனர். எதிர்வீட்டு நல்லப்பனிடமும் பெருமையுடன் பேசுகின்றனர். ~~குழந்தை~~ பழுக்கும் முன்பே முதல் சீப்பு எனக்கு, உனக்கு என்று பங்குபோட்டு பேசிக் கொள்கின்றனர். பண்ணைப் பரந்தாம முதலியாரின் மருமகப் பெண் முத்துவிஜயாவின் பிறந்தநாள் விழாவிற்கு செவ்வாழைக் குலை செங்கோடனிடம் இருப்பதாக சுந்தரம் கூற, செங்கோடனுக்கு மறுப்புத் தெரிவிக்க முடியாமல் ~~அதை~~ அதைக்கொண்டே வெட்டிக் கொடுக்கிறான். பார்வதி பாட்டியின் சாவிற்கு பாடையில் செவ்வாழை மரத்தைக் கட்டினர். குழந்தைகள் அழுது கொண்டு நின்றனர்.

## 7. வலம்புரிச் சங்கு

நா. பார்த்தசாரதி

ஆசிரியர் குறிப்பு: சிறந்த எழுத்தாளர். தீபம் இதழின் ஆசிரியர். ஆத்மாவின் ராகங்கள், பொன்விலங்கு, குறிஞ்சிமலர் போன்ற நாவல்களை எழுதியுள்ளார். வரலாற்று நாவல்: கபாடபுரம்.

கதாபாத்திரங்கள்:

பூமாலை - சங்கு குளிக்கும் தொழிலாளி
பரமசிவம் - காண்ட்ராக்டர்
பூமாலையின் தம்பி, அம்மா, மனைவி, இரண்டு குழந்தைகள், போலீஸ் இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள்கள், சக தொழிலாளிகள்.

கதைச் சுருக்கம்

நான்கு பேர் எடுக்கும் சங்கை ஒரு ஆள் எடுக்கும் திறமைசாலி பூமாலை.

அன்று பூமாலையின் மனைவிக்கு பிரசவ வலி போல் தெரிகிறது. காலை எழுந்தது முதலே பூமாலைக்கு மனது ஒரு மாதிரியாகவே இருந்தது. அதனால் வேலைக்கு அழைத்த சக தொழிலாளிகளிடம் தான் வேலைக்கு வரவில்லை என்று கூறிவிட்டான்.

குழந்தை பிறந்ததும் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறி ~~அவ~~ பூமாலையை அழைத்து வாருங்கள் என்கிறார் கான்டிராக்டர் பரமசிவம். பூமாலை குழியில் குதித்து மேல் வரும்பொழுது கையில் வலம்புரிச்சங்குடன் வருகிறான். மேலே வரும்பொழுது, அங்கு வந்த பூமாலையின் தம்பி அண்ணியும், குழந்தையும் இறந்துவிட்டார்கள் என்று கூறக்கேட்ட அதிர்ச்சியால், கையிலிருந்த சங்கைக் கீழே போட்டுவிட்டான். இறப்பிற்காக வருந்தாத பரமசிவம் பூமாலையைக் கடிந்துகொண்டு அடுத்த ஆணைத் தேடச் சொல்கிறான். கிடைக்கவில்லை.

இறுதிக் காரியம் முடித்து வெறும் வயிற்றுடன் சோகமே உருவாகியிருந்த பூமாலையை சங்கைத் தேடித்தர போலிஸில் கம்ப்ளையண்ட் கொடுத்த பரமசிவம். போலீஸ் கான்ஸ்டபிள்கள் அழைத்துச் சென்று தேடவைத்தனர்.

பூமாலை கையில் அதிர்ஷ்டம் தரும் ~~சங்குடன்~~ வலம்புரிச் சங்குடன் மேலே வந்தான். ஆனால் அவன் இறந்துவிட்டான்.

க. வீணை பவானி

– கல்கி

ஆசிரியர் குறிப்பு:

இயற்பெயர் இரா. கிருஷ்ணமூர்த்தி

முதல் சிறுகதை : சாரதியின் தந்திரம்

சிறுகதைகள்: கேதாரியின் தாயார், காரிருளில் ஒரு மின்னல், அபலையின் கண்ணீர், மாடத்தேவன் சுனை, மயில்விழிமான் முதலியன.

மிகச்சிறந்த வரலாற்று நாவல்களைத் தந்தவர் கல்கி. தமிழ்நாட்டின் வால்டர்ஸ்காட் என்றழைக்கப்படுபவர்.

## கதைமாந்தர்கள்

ஐயம்பேட்டை தந்தப்பன், பூந்தோட்டம் பவானி, பவானியின் தாய் மரகதாம்பாள், கோபாலசாமி முதலியோர்.

## கதைச்சுருக்கம்

பவானி ஒரு மேடைப்பாடகி. ஐயம் பேட்டை தந்தப்பனுடன் தந்தை போல் உரிமையுடன் பழகுவாள். தாய் மரகதாம்பாளுக்கு தன் மகளை நல்ல பையனுக்குத் திருமணம் செய்து கொடுக்க ஆசை. பவானியோ ஆண்டாள் போல் இறைவன் திருவடி சேர ஆசை எண்ணுகிறாள். இதற்கிடையில் இவள் பாடும் மேடைக்கெல்லாம் சென்று கோபாலசாமி முதலியோர் கச்சேரியை ரசிக்கிறார். வைர மோதிரம் பரிசாக் கொடுக்கிறார். அவர் மேல் பவானிக்கு ஈர்ப்பு வருகிறது. அவருக்கோ குடும்பம், குழந்தைகள், வழக்குகள், எதிரிகள் என்றிருக்கின்றது.

பவானி இதுதான் நான் கடைசியாக ஏறும் மேடை என்று தந்தப்பனிடம் கூறுகிறாள். கையில் ஒரு கடிதம் இருந்தது. அதில் கோபாலசாமி முதலியாரைப் பிரிந்து என்னால் வாழமுடியாது, அவர் கொடுத்த வைரம் போதும். என்றிருந்தது. வைரத்தைப் பொடித்து சாப்பிட்டு இறந்து விடுகிறாள்.

## 9. அர்ச்சனை ரூபாய் – கு.ப. ராஜகோபாலன் 

முதல் சிறுகதை : நூருன்னிசா

தொகுதிகள் : புனர்ஜென்மம், காணாமலே காதல், கனகாம்பரம், காஞ்சனமாலை, சிறிது வெளிச்சம், விடியுமா

இதழாசிரியர் : கிராம ஊழியன்.

~~கதைச் சுருக்கம்~~

கதை மாந்தர்கள்!

பாலு, மனைவி ஜானகி, குழந்தை ராஜம், தோட்டி, பாலுவின் அம்மா.

### கதைச் சுருக்கம்

குழந்தை ராஜத்திற்கு விடாத காய்ச்சல், பத்து போட்டும், மணிவிடைகள் செய்தும் வருகிறாள் மனைவி ஜானகி. சாமிக்கு நேர்ந்து 1 ரூபாய் காசு எடுத்து வைக்கிறாள் அம்மா. தோட்டி வாயில் பெருக்கி வருகிறான். தன் குழந்தைக்கும் காய்ச்சல்தான் - போய்தான் பார்க்க வேண்டும் என்கிறான். பாலு சாமிக்கு வைத்த காசை தோட்டிக்குக் கொடுக்கிறான். கிறித்துவ சிறுவன் படிக்கும் பைபிள் பாடம் பாலுவின் காதில் ஒலித்தது.

"ஏழைகள் பாக்கியசாலிகள்; அவர்கள் பூமியை ஆள்வார்கள்" - பாலுவின் கண்ணில் நீர் மளமளவெனக் கொட்டியது.

## 10. மாத்திரை – ஆண்டாள் பிரியதர்ஷினி

நெல்லை மாவட்டம், பொதிகைத் தொலைக்காட்சியில் கோவைப் பிரிவில் நிகழ்ச்சிப் பொறுப்பாளராகப் பணியாற்றியவர்.

தொகுப்புகள் : சுயம் பேசும் கிளி, முத்தங்கள் தீர்ந்து விட்டன, மதியப் பொழுதின் பாலை, சூரியனை விடியவைப் போம்

சிறுகதைகள் : சுருதி மீட்காத வீணை, தலைமுறை தாகம், விடிவைத் தேடி போன்றவை.

பட்டம் : எழுத்துலகச் சிற்பி

## கதை மாந்தர்கள்

சரசு - குடும்பத் தலைவி
கணேஷ் - கணவன்
குழந்தை

## கதைச் சுருக்கம் :

சரசுவிற்குத் தொடர் தலைவலியாக உள்ளது. அலுவலகம் சென்று வரும் கணவன் ஒரு நாளும் அன்புடன் சரசுவிடம் எதுவும் கேட்பதில்லை. அது அவளுக்கு மிகுந்த வருத்தமளித்தது. பள்ளி சென்ற தன் குழந்தை வந்து அம்மாவைக் கட்டியணைத்து முத்தம் கொடுக்கிறாள். கனிவுடன் உனக்கு உடம்பு சரியில்லையா? எனக் கேட்டு தனக்குக் கொடுத்த பிரெட்டைக் கொடுக்கிறாள். எனக்கு வேண்டியது இதுதானே திருவு! என்று முத்தமிடுகிறாள். முத்தமே சரசுவிற்கு மாத்திரையாகிறது.

# கறுப்பின் குரல்

## 1

ஒன்றுபோல் இருக்கும் எதுவும் ஒன்றில்லை. ஒவ்வொன்றும் தனியானவை. அதில் சிலது தெரிகிறது. பலது தெரிவதில்லை. அதுதான் வித்தியாசம். நானும், என் அண்ணன் பரமசிவமும் ஒன்றில்லை. ஆனால் பார்க்க ஒன்றுபோல் இருப்போம். அவனுக்கும் எனக்கு நான்கு வயது வித்தியாசம், பார்த்தால் தெரியாது. இரட்டையர்கள் மாதிரி இருப்போம், நான் அப்படி வளர்ந்து விட்டேன். அதற்குக் காரணம் இல்லை என்று சொல்ல முடியாது. தெரியவில்லை என்பதற்காக ஒன்று இல்லாமல் போவதில்லை.

அதுதான் வாழ்க்கை. நான் திருவனந்தபுரத்திற்கு வந்து மூன்று நாளாகிறது. சாலை பஜார்க்குச் சென்று மாதவனைப் பற்றி விசாரித்தேன். அவர் என் சிநேகிதனோ உறவோ இல்லை. ஏழாண்டுகளுக்கு முன்னால் என் சிநேகிதன் பாண்டியன் சாலை பஜார் மாதவனைப் பற்றிச் சொன்னான். சிநேகிதன் என்றால் அது மாதவன்தான் அவனுக்கு ஒப்பு உவமை எதுவும் சொல்ல முடியாது.

எனக்கு அவன் வேண்டியவன் என்பதால் சொல்லவில்லை. உண்மையாகவே அவன் உபகாரி. வேண்டியவன் வேண்டாதவன் என்று பாகுபாடு இன்றி எல்லோரையும் ஒரே மாதிரி நடத்துவான். அது அபூர்வமான குணம். நான் அந்தக் குணத்தை முதலில் ஜெயலட்சுமியிடம் கண்டேன், அப்புறம் சாலை பஜார் மாதவன்.

சாலை பஜார் மாதவன் கிறுக்கோ என்றுகூட நான் நினைத்ததுண்டு. என்மீது அவனுக்கு எல்லை இல்லாத அபிமானம். என்னைப் பார்த்துவிட்டால், அவன் தன் கடை, வியாபாரம், மனைவி - எல்லாவற்றையும் மறந்துவிடுவான். நான் சொல்வது என்னவோ நம்ப முடியாதது மாதிரி இருக்கும். ஆனால் அதுதான் உண்மை (உண்மை என்பது நம்ப முடியாது) அதனால்தான் கொஞ்சம் மாறி திருத்தி நம்புவது மாதிரி சொல்கிறார்கள்.

நான் நடந்ததை நடந்த மாதிரியே சொல்கிறஆள். (நடந்ததை நடந்து மாதிரி சொல்வது பலர்க்குப் பிடிக்காது.) அது எனக்குத் தெரியும். தெரியும் என்பதற்காக நான் மாற்றி சொல்வது கிடையாது. அதனால் நான் ரொம்ப அனுபவித்து இருக்கிறேன். அதில் நல்லதும் உண்டு; கெட்டதும் உண்டு.

வாழ்க்கை என்பது கெட்டதோ; நல்லதோ கிடையாது. அது எல்லாம் கலந்தது. கெட்டதைத் தனியாகவும்; நல்லதைத் தனியாகவும் பிரித்தெடுக்கத் தெரிந்து இருக்கவேண்டும். அதுதான் அறிவு.

அறிவு நல்லது இல்லை என்பது மாதிரியே அழகும் நல்லது இல்லை. இரண்டும் வாழ்க்கைக்கு எதிரி. நல்வாழ்க்கையைக் குலைத்துவிடும். என் மனைவி மகா அழகி. கோடியில் ஒருத்தி. அழகு என்பதின் உச்சம்.



அவளைத்தான் மானிட பிறப்பின் ஆதாரம் என்பேன். எல்லா பெண்ணும் அழகாக இருக்க வேண்டியதில்லை. பெண் ஒரு தேவை. பயன்பாட்டில் உள்ளவள் - அதைத் திரித்து மறைத்து எத்தனைத்தான் சொன்னாலும் உண்மை என்பது ஒன்று இல்லாமல் போவதில்லை. அழகின் சொரூபமான என் மனைவியை நான் தெய்வமாகவே கொண்டாடினேன். அம்பாள் என்று அவளை நான் ஆராதித்தேன். ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கும் சூடிகொடுத்த சுடர்கொடியே எழுந்து வந்துவிட்டது மாதிரி பிரமிப்பு அடைந்தேன். நான் சொல்வதை விட அனுபவித்தது அதிகம். எனவே நான் என் மனைவி கொன்றுவிட்டேன். பொறாமையால் கொன்றேன்; ஆசையால் கொன்றேன். அவள் அழகை அனுபவித்துக்கொண்டே கொன்றேன்.

அது ஒரு இரவில் நிகழ்ந்தது. எல்லாம் காலம் செல்லச் செல்ல மறக்கும் என்றாலும், நான் என் மனைவியைக் கொன்றது நன்றாக நினைவில் இருக்கிறது. நான் அவளைக் கொல்லவேண்டும் என்பதற்காகவே கொன்றேன். என் அண்ணனோடு அவள் நெருங்கிப் பழகினாள். முதலில் நான் என் அண்ணனை கொல்ல நினைத்தேன். அவனைக் கொல்வது எளிதது. அவன் கோழை. புத்தி இல்லாதவன். சின்ன வயதில் இருந்தே கண்களில் படும் எல்லாவற்றின் மீதும் ஆசைப்படுவான். தனக்குத் தேவையா? பிரியமானதா? அபூர்வமானதா என்றெல்லாம் பகுத்தறிந்து பார்க்க மாட்டான். கண்களில் படுவதெல்லாம் அவன் உடமையாகி விடவேண்டும். அவ்வளவுதான்.

அது முட்டாள் காரியம். அறிவு இல்லாதவன் செயல். உலகத்தில் பெரும்பான்மையானவர்கள் முட்டாள்கள்; மூடர்கள். அறிவு என்பதே என்னவென்று

தெரியாதவர்கள். ஆனால் தன்னை உலகத்திலேயே அறிவாளிகள் என்று நினைத்துக்கொண்டு இருப்பவர்கள். அதாவது முட்டாள்கள் அதிகமாகவும் - அறிவாளிகள் குறைவாகவும் இருந்தாலும், முட்டாள்கள்தான் எல்லா இடத்திம் நிறைந்து இருக்கிறார்கள். அதில் கொடுமை என்னவென்றால், முட்டாள்கள் தங்களை மகா புத்தி சாலிகள் என்று நினைத்துக்கொண்டு இருப்பதுதான். முட்டாள்களைப் பார்க்கிறபோது நான் பெரிதாகச் சிரித்து விடுவேன். என்னால் அறிவின்மையைத் தாளவே முடியாது. எதை எதையோ நான் பொறுத்துக்கொண்டு இருக்கிறேன். ஆனால் மூடத்தனத்தை மட்டும் தாள முடிந்ததே இல்லை. அதற்காக இரண்டுமுறை வேலையை விட்டேன். நானாகத்தான் வேலையை விட்டேன்.

என்னை வேலையை விட்டுத் தூக்க ஒருத்தனுக்கும் தைரியமில்லை. முட்டாள்கள், கோழைகள். முடிவு எடுக்க மாட்டார்கள். தான் அறிவாளி. முடிவு எடுக்கத் தெரிந்தவன். வேலையால் ஒரு மனிதன் உயிர் வாழ்வதில்லை. உயிர்வாழ்வதால் வேலை செய்கிறான். அதுதான் உண்மை. அது பலர்க்குத் தெரியவில்லை. தெரிந்தவர்களில்கூட சொல்லத் தெரிந்தவர்கள் வெகுசொற்பம். சொற்பம் என்பதே அதன் பெருமை.

நான் பெருமைக்கு உரியவன். அதனால் வாழ்கிறேன் என்பது மட்டுமல்ல; அதைத்தெரிந்தும் வைத்துக் கொண்டும் இருக்கிறேன். அந்த அறிவுதான், என்னை திருவனந்தபுரம் கொண்டுவந்து சேர்த்து இருக்கிறது. பத்மநாபன் பள்ளிக்கொண்டிருக்கும் கோவிலுக்குச் சென்றேன். கிடந்த கோலத்திலிருக்கும் பத்மநாபன் என்னைப் பார்த்து புன்னகைப் பூத்தார். பெருங்கூடத்தில் அவர் என்னையும் - நான் அவரையும் அடையாளங்கண்டு



கொண்டோம். அதற்கு ஒரு நிமிஷம் போதுமானதாக இருந்தது. நான் கோவில் உள்ளே இருந்து வேகமாக வெளியில் வந்தேன். எதன் பொருட்டு வந்தேன் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது.

ஒரு கள்ளுக்கடைக்குச் சென்றேன். நான் சென்னையில் குடிக்கிற ஆளில்லை. அதனால் குடிக்கு விரோதி இல்லை. கள், சாராயம் பற்றி எனக்குப் பயமில்லை. அதனால் மனிதனை ஒன்றும் செய்துவிட முடியாது என்பது என் நம்பிக்கை. மனிதனை முடமாகக் கூடியது என்று ஒன்று உலகில் உண்டென்றால் - அது பெண் தான். இப்படிச்சொல்ல எனக்குப் பயமோ - கூச்சமோ கிடையாது. நான் பொய்யனோ - பொய்ச் சொல்லக் கூடிய ஆளோ இல்லை.

பாண்டியன், என்னிடம் அடிக்கடி, "தியாகு உன்னிடம் எனக்குப் பிடித்த குணம் நேர்மைதான் நீ எதையும் மறைத்து ஒளித்துப் பேசுவது இல்லை" என்று சொல்வான்.

நான் அவனுக்குப் பதிலொன்றும் சொன்னது இல்லை. ஏனெனில் அவனுக்கு எதுவும் புரியாது. நான், நேர்மையாளன் என்பதை எப்படியோ கொஞ்சம் புரிந்து கொண்டு இருக்கிறான். அதை விளக்கிச் சொன்னால், அதுவே சரியாக இருக்காது. நான், அதை ஸ்ரீ சைலம், மூகாம்பிகை, திருப்பதி, திருவானைக்காவல், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத் என்று எல்லா இடத்திலும் சுற்றிப் பார்த்துவிட்டேன். அறிவை, நீ எங்கு சென்றாலும் அடைய முடியாது. அதுதான் உண்மை.

ஒருநாள், கங்கைக்கரையில், ரிஷிகேஷில் நடந்து கொண்டிருந்தேன். மனித வாழ்க்கையில் விசித்திரம் என் மனத்தில் தோன்றி தோன்றி மறைந்துகொண்டே இருந்தது.

கூட்டம் கூட்டமாக கங்கையில் ஆண்களும் - பெண்களும் குழந்தைகளும் இறங்கி நீராடி கரையேறி கொண்டிருந்தார்கள்.

நான் கங்கையில் அதிகாலையில் நீராடிவிடுவேன். எனக்குப் பனி, குளிர் என்பதெல்லாம் ஒருபொட்டே இல்லை. நீ எதன் மீது ஆசைப்படுகிறாயோ அது நடக்கும். ஆசையென்றால் பிரியம். ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் கடந்து, என் தாயும், தந்தையும் தமயனும் கண்களால் காணாத கங்கைக்கரைக்கு வந்திருக்கிறேன். அவர்களால் முடியாதது, எனக்கு முடிந்து இருக்கிறது. காரணம், நான் ஆசைப்பட்டேன்.

சிவானந்த ஆசிரமத்தில் மூன்று நாட்கள் தங்க இடம் கொடுத்தார்கள். அதுவே ஆச்சரியந்தான். நான் இடம் கேட்டு முன் பதிவு செலவும் செய்யவில்லை. காலைப் பொழுதில் தங்க இடம்கேட்டு ஆசிரமத்தின் முன்னே நின்றேன். ஒரு மகராஜ் என்னை ஏறெட்டுப் பார்த்தார். அப்புறம் நோட்டைப் புரட்டியபடி "பெயர்?" என்றார்

"தியாகராஜன்"

"7-வது அறை. மூன்று நாட்கள்".

நான் கரம் கூப்பினேன்.

நீ எதை ஆசைப்பட்டாலும் கிடைக்கும். ஆனால் மனப்பூர்வமாக ஆசைப்படவேண்டும் அதுதான் முக்கியம்.

ஆசையை ஒழியென்பது அயோக்கியத்தனம். வாழ்க்கையை அழகுடன் மிளிர வைப்பது ஆசைதான். ஆசைப்படப்பட்டால் உனக்கு எல்லாம் கிடைக்கும். ஆசை இல்லாவிட்டால் மனிதன் வெறும் புழு. எட்டுக்கால் பூச்சி.



எதற்கும் பயனில்லாதவன். ஆசையே அவனை மேலே உயர்த்தி இருக்கிறது. இப்படி பொதுப்படையாகச் சொன்னால் புரியாது. புரியும்படி சொல்வேண்டுமானால் என்னைத்தான் உதாரணமாகச் சொல்லவேண்டும். நான் ஆசைப்படுகிற ஆள். ஆனால் என் அண்ணன் மாதிரி பேராசைக்காரனில்லை. நான் கண்ணால் கண்டது காணாதது என்று எல்லாவற்றின் மீதும் ஆசைப்பட மாட்டேன். எது எனக்கு உப்பானதோ - எது எனக்கு உள்ளக் கிளர்ச்சியைக் கொடுக்கிறதே அதன் மீது மட்டுந்தான் ஆசைபடுவேன். அதனால் நான் எதன் மீது ஆசைப்படுகிறேனோ அது தன் உடமையாகிவிடும்.

கங்கைக்கரைக்கு, ரிஷிகேஷ்க்கு வரவேண்டுமென ஆசைப்பட்டேன். நான்காவது நாள் வந்து சேர்ந்து விட்டேன்.

பாண்டியன் சொல்வான், "தியாகு, நீ ரிஷி. எது நினைத்தாலும் நடக்கிறது" என்று. நான் நடக்கறதை நினைக்கிறவன். ஆனால் தற்பெருமை பேசுகிற ஆளில்லை. என்னைப் பற்றி பெருமையாகப் பேசுவது கிடையாது. அதுபோல சிறுமையாகத்தாழ்த்திக்கொண்டு பேசுவதும் இல்லை.

எங்கு எதைபேச தோன்றுகிறதோ அதை அங்கே பேசுவேன். அதனால் சண்டை, விரோதம், வம்பு, கலவரம் எல்லாம் ஏற்பட்டு இருக்கிறது. அடிகூடபட்டு இருக்கிறேன். அதில் எனக்கு வருத்தம் கிடையாது. மூடர்கள்; அறிவு இல்லாதவர்கள் மத்தியில் அறிவு உள்ளவனுக்கு என்ன நேருமோ அது எனக்கு நேர்ந்தது. அதற்காக நான் ஏன் வருத்தப்படவேண்டும்.

யார்க்கு என்ன பேசினால் அது பிடிக்கும் என்று இடம் பார்த்து பேசக்கூடிய ஆளில்லை நான். எந்த

இடத்தில் எதைப் பேசினால் உண்மை எல்லோர்க்கும் போய் சேருமோ - அந்த இடத்தில் உண்மையை மட்டும் பேசக்கூடிய ஆள். உண்மை பேச எனக்குப் பயமோ தயக்கமோ வந்ததில்லை. மறைத்து ஒழித்துக்கட்ட வேண்டியது உண்மை இல்லை என்பது என் கொள்கை.

உண்மையைச் சொல்லக்கூடாத இடம் காவல் நிலையம். அதாவது போலீஸ் ஸ்டேஷன். எனக்கு அது தெரியும். தெரிந்தும் நான் உண்மையைச் சொன்னேன். அதாவது என் பிரிய சகியை - உடலாலும் உள்ளத்தாலும் நேசித்த பாரிஜாதத்தை - என் மனைவியைக் கொன்றதைச் சொன்னேன். உண்மையை போலீஸ் ஏற்றுக்கொள்ள வில்லை.

உண்மையென்பது இன்னொருவர் ஏற்பதற்காகச் சொல்வதில்லை. உண்மையெனப்படுவதால் சொல்லப் படுவது. அதற்கு இன்னொரு ஆள் சான்றிதழ் தரவேண்டியது இல்லை. ஏனெனில் உண்மை தன்னைத் தானே ஸ்தாபித்துக்கொண்டுவிடும். பொய்யை உண்மைச் சுட்டெரித்துவிடும். அதுதான் உண்மையின் வலிமை.

நான் உய்மையைச் சொன்னதும் போலீஸ் மிரண்டு போய்விட்டது. பெரிய ஆபீஸர், சின்ன ஆபீஸர் எல்லாம் கூடிக்கூடி ரகசியம் போல பேசிக்கொண்டார்கள். அவர்கள் பதற்றம் என்னை எரிச்சல் அடையவைத்தது.

"நான் சொல்வது எல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறொன்றும் இல்லை" என்றேன்.

"இவனுக்கு கிறுக்குப் பிடிச்சி இருக்குது" என்றார் பெரிய ஆபீஸர், சின்ன ஆபீஸர்களைப் பார்த்து.

"ஆமாம் சார்" என்றான் ஒருவன்.



"ரொம்ப நாளாவே இவன் ஒரு மாதிரி சார். இப்ப ரொம்ப முத்தி இருக்குது" என்றான் இன்னொருவன்.

நான் அவர்களை விசித்திரமாகப் பார்த்துக்கொண்டு இருந்தேன். மனிதர்கள்தான் எப்படியெல்லாம் இருக்கிறார்கள். தனியாக இருக்கும் போது ஒரு தினுசாகவும்; கூட்டமாக இருக்கும்போது இன்னொரு தினுசாகவும் எப்படி மாறுகிறான் என்பதை நினைத்துப் பார்த்துக்கொண்டு இருந்தேன். சிரிப்பு வந்தது. வாய்விட்டு சப்தமாகச் சிரித்தேன். கைத்தட்டி எம்பிக் குதித்தேன். என் சிரிப்பும் குதிப்பும் போலீஸை கலவரப்படுத்தியது போலும். என்ன செய்வது என்று ஒருவர் முகத்தை இன்னொருவர் என்று மாறிமாறி பார்த்துக் கொண்டார்கள். உயரமாக மீசையை மேல்நோக்கித் திருகிவிட்டுக் கொண்டிருந்த ஒரு போலீஸ், பெரிய அதிகாரிபோலும், "இடியட்" என்று என்னைப் பார்த்துக்கத்தினான்.

அந்த முட்டாளைப் பார்க்க எனக்குப் பாவமாக இருந்தது. இந்த உதவாக்கரையிடம் மாட்டிக்கொண்டு அல்லல்படும் போலீஸ்காரர்களைப் பற்றி வருத்தப் பட்டேன்; அப்புறம் அவன் மனைவி, மகன், மகள் - பற்றி எல்லாம் நினைத்துப் பார்த்தேன். ஒரு கணந்தான் பிறகு மனசே துயரத்தில் வெடிப்பது மாதிரி இருந்தது. நான் அந்தப் போலீஸ் அதிகாரிக்காகவும் - அவன் கீழ்யுள்ள போலீஸ்காரர்களுக்காகவும் - அவன் மனைவி மக்களுக் காகவும் அழ ஆரம்பித்துவிட்டேன். நான் சாதாரணமாக அழக்கூடிய ஆளில்லை. ஒரு ஆள் செத்தால்கூட அழ மாட்டேன். சாவு துக்கம் இல்லை. சந்தோஷம், சாவு என்று நம்பக்கூடிய ஆள். அப்படிப்பட்ட எனக்குத்திடீரென்று அழுகை வந்துவிட்டது. மூஞ்சியை இரண்டு கைகளாலும் மூடிக்கொண்டு கேவிக்கேவி அழ ஆரம்பித்தேன். என் அழுகை வரவர கூடிக்கொண்டு வந்தது.

"இந்த பைத்தியம் அழுதே உயிரவாங்கிடும் போல இருக்கு. ஆஸ்பத்திரியில கொண்டுபோய் தள்ளு" என்று பெரிய அதிகாரி சின்ன அதிகாரிகளிடம் சொல்லிவிட்டு வேகமாக வெளியில் சென்றார்.

நான் அழுதுகொண்டே இருந்தேன்.

"அழுறதை நிறுத்துடா" என்று ஒரு போலீஸ் என் இரண்டு கால்களிலும் மாறி மாறி அடித்தான். அவன் அடிக்க அடிக்க என் அழுகை அதிகமாகி விட்டது. வாயைப் பிளந்துகொண்டு அழ ஆரம்பித்தேன். போலீஸ்காரன் தடியை வாய்க்குள் சொறுகினான்.

"இம்சைப்படுத்தாதே" என்று ஒரு சின்ன அதிகாரி கத்தினான். என் வாயில் சொறுகப்பட்ட தடியைப் பிடுங்கினான்.

நான் அழுதுகொண்டே இருந்தேன். அவர்கள் அடித்ததால் நான் அழவில்லை. அவர்களுக்காக நான் அழுது கொண்டு இருந்தேன். அது அவர்களுக்குத் தெரியவில்லை. வாழ்க்கையை சோகமுடையதாக்குவது அதுதான்.

## 2

பாரிஜாதம் கொலைக்காக போலீஸ் என்னை எங்கெங்கோ அழைத்துச் சென்றது. போலீஸ் நிலையத்தில் பத்து நாட்கள் போல இருந்தேன். தினமும் என் அண்ணன் பரமசிவம் வந்து பார்த்தான். அவனைப் பார்க்க எனக்குப் பாவமாக இருந்தது. பேசப் பிடிக்க வில்லை. நிஜமாகவே நான் வெறுத்த ஆள் என் அண்ணன் தான். அவன் பெரிய முட்டாள். அதற்காகவே அவனை அடியொடு வெறுத்தேன். நான் வெறுக்க வெறுக்க அவன் என்னோடு குழைந்தான்.



"உனக்கு ஒன்னும் இல்ல. எல்லா சரியாபோயிடும்" என்றான்.

நான் அவன் முகத்தில் காறி துப்பினேன். அவனை நான் வெறுத்தேன். அடியொடு வெறுத்தேன் பாரிஜாதத்தைப் போல - அவனையும் கொலைசெய்ய என் கைகள் பரபரத்தன. என் மனசுக்குள் இருப்பது அவனுக்குத் தெரிந்தது போலும். தூரத்தில் நின்றுகொண்டே இருந்தான்.

உலகத்தில் அன்பு பாசம் உறவு என்பதெல்லாம் ஒன்றும் கிடையாது. அது உண்மை. ஆனால் உண்மையை யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. பொய்யை ஒன்றின் மேல் ஒன்றாக ஏற்றிவைத்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். உண்மை என்று ஏற்கப்பட்டிருப்பதில் ஏராளமாகப் பொய் இருக்கிறது என்பதுதான் உண்மை. நானும், என் அண்ணனும் ஒன்றுபோல் இருந்தாலும் ஒன்று இல்லை. அவன் பொய்; நான் உண்மை. அவன் என் பாரிஜாதத்தை அபகரித்துக்கொண்டுபோய் விட்டான். அதுதான் தாளமுடியாமல் போய்விட்டது. தாங்கள் செய்கிற காரியம் எனக்குத் தெரியாது; தெரிந்து கொள்ளும் அளவிற்கு எனக்குப் புத்தியில்லையென்று இருவரும் கொட்டமடித்தார்கள். அதைத்தான் என்னால் தாள முடியாமல் போய்விட்டது.

யாரும் எதற்கும் கட்டுப்பட்டவர்கள் இல்லை. தாலி கட்டியதால் பாரிஜாதம் எனக்குச் சொந்தம் என்று கொண்டாடமாட்டேன். நான் விசாலமான மனம் படைத்தவன். அற்பனோ; கஞ்சனோ கிடையாது. பாரிஜாதம், தான் யாருக்குச் சொந்தம் என்பதை முடிவெடுக்கும் உரிமை கொண்டவள். அவளைப் பற்றிய வரையில் அவள் முடிவுதான் சரி. அதன்மீது தவறு சரியென தீர்ப்புச் சொல்ல யாருக்கும் உரிமை கிடையாது. என் மனைவி என்பதற்காக உரிமைகொண்டாட முடியாது. என் கோபத்திற்கெல்லாம் காரணம், என்னை ஏமாளி என்று நினைத்ததுதான். முட்டாள் என்று பட்டம் கட்டிவிட்டு கொட்டம் அடித்ததுதான்.

நான் எதையும் பொறுத்துக் கொள்ளுவேன். ஆனால் நான் ஏமாளி இல்லை. என்னை ஏமாற்ற முடியாது. நான் அனுமதிக்கிற வரையில்தான் சாகசம் செல்லுபடியாகும். எதற்கு ஓர் எல்லை உண்டு. வெள்ளம் வந்தால் ஆற்றின் கரை உடையும்; கடல் பொங்கினால் ஊர் அழியும். பூமி பிளந்தால் கட்டிடங்கள் உடைந்து சிதறும். அறிவாளி சினந்தால்....

பாவம், பாரிஜாதம். இன்றும் பல நாட்கள் நகையும், பட்டுப்புடவையும் அணிந்து கொண்டு அலங்காரத்தோடு வாழ்ந்து சந்தோஷம் கொடுத்து, சந்தோஷம் அனுபவிக்க வேண்டியவள். இளமை பூரிக்கும் வயதில் செத்துப் போனாள். செத்துப்போனாள் என்றால், தன்னுடைய மூர்க்கத்தனத்தால், ஆசையால் மோசம் போய் செத்துப் போனாள். அவள் சாவிற்கு அவள் ஒரு காரணம்; என் அண்ணன் பரமசிவம் இன்னொரு காரணம். காரணம் இல்லாமல் காரியம் இல்லை. சில காரணம் வெளிப் படையாகத் தெரியும். அதன் ஊடே உள்ளே சென்றால் நூறு



காரணங்கள் தெரியும். எந்த ஒரு காரியத்திற்கு ஒரு காரணம் கிடையாது. ஒன்றுக்குள் ஒன்றாக பல காரணங்கள் இருக்கின்றன. சிக்கலாகிப்போன நூல்கண்டில் முனையை கண்டுபிடித்து சிக்கலை அவிழ்ப்பது மாதிரிதான். சிக்கலை அழைப்பது பாரிஜாதம் சேலையை அவிழ்ப்பது மாதிரி எளிதானதில்லை. அது அவசரம், பரபரப்பு, மோக தாகத்தில் இரண்டு பேர் செய்கிற காரியம். யார் முதலில் அவிழ்ப்பது என்றெல்லாம் சொல்வது அந்தந்த நேரத்தைப் பொறுத்தது. பாரிஜாதம் என்னைவிட அதில் முன்னே இருந்தால் என்பது அவளை குற்றம் சொல்லச் சொல்வதில்லை. முடிச்சவிழ்க்க நான் படுகிற கலவரத்தைப் பார்த்துவிட்டு அது முடியாமல் நான் தவிப்பதைக் கண்டு இரக்கமுற்று எனக்காகவே அவள் அவிழ்த்துவிட்டது மாதிரிதான் தெரிந்தது. அது உதவி. உபகாரம். இரவில் மகளிரோடு களியாட்டம் ஆடியதைப் பற்றி பகலில் பேசக்கூடாது. அதுவும் சம்பந்தப்பட்டவர் களோடு பேசவே கூடாது. பேசுகிற காரியமில்லை அது. என்னுடைய பத்தொன்பதாவது வயதில் தெரிந்து கொண்டேன். அதுநான் கல்லூரியில் சேர்ந்த இரண்டாவது ஆண்டு. நான் நன்றாகப் படிக்கும் மாணவன். படிப்பு மட்டுமல்ல சதுரங்க ஆடுவேன். தமிழ்நாடு, பல்கலைக் கழகங்கள் சார்பாக கான்பூரில் பத்து நாட்கள் நடைபெற்ற சதுரங்க போட்டியில் கலந்துகொண்டு தேசிய சாம்பியனாக வெற்றிபெற்றேன்.

நான் பின்னால் இருந்து முன்னே சொல்கிறேன். நன்றாக மனத்தில் வாங்கிக்கொள்கிறவனுக்கு பின் முன்பு என்பதெல்லாம் கிடையாது. எப்படி மாற்றிச் சொன்னாலும் சரியாகப் பொறுக்கிப் பார்த்துக்கொள்வான். அது அவன் திறமை. புரிந்துகொள்கிற மாதிரி சொல்வது இல்லை; சொல்லப்படுவதை அடுக்கி தெரிந்துகொள்ள

வேண்டும். அது சிரமம் மாதிரி தெரியும். உண்மையில் அதுதான் சுலபமானது. ஒரு விஷயத்தை எப்படி மாற்றி சொன்னாலும் அதன் உண்மையான அம்சத்தை நான் தெரிந்துகொண்டு விடுவேன். அந்தத் திறமைதான் என்னை சதுரங்கத்தில் நல்ல ஆட்டக்காரனாக மிளிர வைத்தது.

சதுரங்கம் இரண்டு பேர் எதிர் எதிராக உட்கார்ந்து கொண்டு அமைதியாக ஆடும் விளையாட்டுப்போல தோன்றும். ஆனால் உண்மையில் அது அப்படியில்லை. புட்பால் மாதிரி, கிரவுண்டு முழுவதும் சென்ட்ரல் பார்வேர்டு ஓடுவது மாதிரி ஒடவேண்டும். அதில் ஒரு கூட்டம் துணைக்கு உண்டு; கோலைத் தடுக்க கோல்கீப்பர் நிற்பான். ஆனால் சதுரங்கத்தில் முன்னே ஓடி ஆடுவதும், பின்னால் ஓடிவந்து தடுப்பதும், கோலில் நின்று பந்தைப் பிடிப்பதும் ஒரு ஆள்தான். அது ஒன்மேன் ஆர்மி. நிஜத்தில் அது பெரிய படையெடுப்புதான். முட்டாள் தனத்திற்கு இடம் கிடையாது; அசடு; சோம்பேறி ஆட முடியாது. எவன் எப்பொழுதும் விழித்து இருக்கிறாளோ அவன் மட்டுந்தான் ஆடுகிற ஆட்டம் சதுரங்கம்.

நான் சதுரங்கம் ஆடுகிறேன் என்பதற்காக அதைப் பற்றி பெருமையாகப் பேசவில்லை. அது உண்மையிலேயே மகத்தான ஆட்டம். எவனெல்லாம் மகா ஞானியோ அவனெல்லாம் ஆடிகளிக்கும் ஆட்டம். ஆடவும் களிக்கவும் தெரிந்துஇருக்க வேண்டும். அதில் வெற்றி தோல்வி என்பதே கிடையாது. ஆட்டம் என்பது தான் முக்கியம். அதுதான் நான். தோல்வி - வெற்றி என்பதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவே மாட்டேன். ஆட்டம் என்பதற்காகவே ஆடுவேன். ஆனால் வெற்றி என் பக்கம் இருக்கும். அதுதான் நீ. அறிவு உள்ளவன் என்பதின் அடையாளம். என் அறிவு உனக்கு வெற்றியைக் கொண்டு



வந்து கொடுக்கும். என் படை நகர்வுகள் எதிராளியை நிலை குலைய வைத்துவிடும். அவன் பயத்தில் தப்புத்தப்பாக படையை நகர்த்தி தோற்றுப்போவான். அதுதான் என் வெற்றி. நான் இப்படிச் சொல்வது என் பெருமையை நானே சொல்வது மாதிரி இருக்கும. உண்மையில் நான் ரொம்ப கூச்ச சுபாவம். புதிய ஆள் அறிமுகம் இல்லாதவர் களிடம் பேசமாட்டேன். பெண்களிடம் பேச எனக்குப் பயம்; ஆனால் பெண்கள் என்னிடம் பேச பயந்ததில்லை. நான் சொல்வது முரண் மாதிரி இருக்கும் ஆனால் உண்மையில் அதில் முரண் ஏதும் கிடையாது.

பெண்களிடம் பேசப் பயப்படும் எனக்கு சிநேகிதிகள்தான் அதிகம். சொன்னால், நம்பமுடியாதது மாதிரி இருக்கும். யாரும் நம்பவேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை. எனக்காகவே சொல்லிக் கொள்கிறேன். நம்புவது நம்பாமல் போவது எல்லாம் அவரவர்பாடு. யாருடைய நம்பிக்கையையும் நான் எதிர் பார்த்துக்கொண்டு இருக்கவில்லை.

நான் ஒருவிதத்தில் கிருஷ்ணன்; மாய கண்ணன். நான் பெண்களைத் தேடி அடைந்ததைவிட பெண்கள் என்னைத் தேடி பிடித்து சிநேகிதம் கொண்டது தான் அதிகம். நான் அதை பெருமைக்காகச் சொல்லவில்லை.

என்னை அவாகள் நன்கு கண்டு கொண்டார்கள். அதுதான் முக்கியம். அதற்கு நான் பிரயாசைப்பட்டது கிடையாது. அதுதானாக நடந்தது. எப்போது, என்ன நடக்க வேண்டுமோ அப்பொழுது அது நடந்தது. மா மரத்தில் காய்த்த மாங்காய் பழுத்து பழமாகி கீழே விழுந்தது மாதிரி. மாம்பழம் கீழே விழும்போது மரம் காயப்படுமா? காற்று வெட்டுப்படுமா? அப்படித்தான். என்னை, சிநேகிதிகள்

வசீகரித்துக்கொண்டு போனார்கள். அதில் போட்டி, பொறாமை எல்லாம் உண்டு. நான் அதில் முக்கியப்பங்கு பெற்றாலும் யார் பக்கமும் சாய்ந்துவிட மாட்டேன். கிட்டத்தட்ட தஞ்சாவூர் பொம்மைதான். தரையைத் தொடுவது மாதிரி சாய்ந்து டக்கென்று தலைநிமிர்ந்து விடுவேன். அதில் எல்லோர்க்கும் சந்தோஷம். அதுதான் நான். எல்லோரும் இன்புற்கு இருக்க நினைப்பது அல்லாமல் வேறொன்றும் அறியாதவன். அதை நான் சொல்லி அறிந்ததைவிட நான் சொல்லாமல் அவர்களாகவே அறிந்து கொண்டதுதான் அதிகம். அதில் என்னைவிட சிநேகிதிகளுக்குதுதான் ஆனந்தம். வெளியில் அதைச் சொல்லமாட்டார்கள். மனத்திற்குள் நினைத்து நினைத்துப் பூரித்துப் போவார்கள். அது எனக்குத் தெரியும். ஆனால் தெரிந்தது மாதிரி காட்டிக்கொள்ள மாட்டேன்.

சிநேகிதிகள் மத்தியில் புத்திசாலியாக இருக்கிறவன் முட்டாள் என்பது மட்டுமல்ல கெடு கெட்ட மூடன். நான் அவனை பரமார்த்த குருவின் சீடர்களான மட்டி, மடையன், பேதை, மிலேச்சன் மூடனோடு கூட சேர்க்க மாட்டேன். அவனுக்கு இந்த உலகத்தில் மட்டுந்தான் என்று இல்லை. எந்த உலகத்திலும் இடம் கிடையாது. அறிவு, திறமை என்பதெல்லாம் சிநேகிதியின் இதயத்திற்குள் நுழைந்துவிடுவதுதான். தெரிந்து நுழைவதைவிட சிநேகிதிகள் தெரியாமல் நுழைவதுதான் பெருமை. சாமார்த்தியம். ஆனால் நிஜத்தில் ஆண் அப்படி ஒன்றும் சாமர்த்தியசாலி இல்லை.

அதற்கு உதாரணம் என்று எங்கேயும் தேடிகொண்டு போகவேண்டாம். நானே சாட்சி. இப்படிச் சொல்ல எனக்கு வெட்கம் இல்லை. அவமரியாதை கிடையாது. எவன் மா வீரனோ அவன்தான் இப்படி சொல்ல முடியும்.



மிருளாளணி என்ற வங்காளத்துப் பெண் பிரமாதமாக சதுரங்கப் படைகளை நகர்த்தி நான்கு ஆட்டங்களை வென்று இருந்தாள். நான் அவள் ஆட்டத்தைப் பார்த்து பிரமிப்பு அடைந்தேன். தயக்கம், தடுமாற்றம் இல்லாமல் ஆடினாள். அதுதான் அவள் பலம். மூன்று வயதில் இருந்து சதுரங்கம் ஆடுகிறாள் என்று டெக்கான் எக்ஸ்பிரசில் படத்தோடு அவளைப் பற்றி எழுதி இருந்தார்கள். வங்காள தேசத்தில் இருந்து புலம் பெயர்ந்து வந்த குடும்பத்தைச் சேர்ந்தவள். தாய் ஆசிரியை; தந்தை டிராம் ஓட்டுநர். இரண்டு அண்ணன்கள். கடைசியாக மிருளாளணி. எல்லா வங்காள பெண்கள் மாதிரி மாநிறம். பெண்கள் நிறம் பற்றி நான் யோசித்ததே இல்லை. நிறம் என்பதைக் கடந்து இருப்பவள் பெண். அவள் எந்த நிறத்திலும் எழிலோடு இருக்கிறாள். கறுப்பே அழகு, காந்தலே ருசி என்று சிவப்பிகளை தேடித் திரியும் என் சிநேகிதர்களுக்கு சொல்லிக்கொண்டே இருந்தேன். ஆனால் ஒரு கறுப்பனும், நான் சொல்வதை கேட்டதில்லை. கேட்கவில்லை என்பதற்காக நான் சொல்லாமல் இருப்பதில்லை. எனக்குச் சரியென்று எதுபடுகிறதோ அதை யாருக்கும் பயப்படாமல் - பின் விளைவு - முன் விளைவு பற்றி யோசிக்காமல் சொல்லி விடுவது வழக்கம். அது நான் தேடி பெற்றது இல்லை. அதுவாக என்னைத் தேடிபிடித்துக்கொண்டு விட்டது.

முதலில் மிருளாளணி சதுரங்க ஆட்டம் என்னைக் கவர்ந்தது. அவள் பதட்டமோ தவிப்போ இல்லாமல் மகாராணி போல தன் படைகளை முன்னே கொண்டு வந்து நிறுத்தினாள். நான்கு காய்களை நகர்த்துவதற்குள் நான் எதிராளியை எடைபோட்டுவிடுவேன். நான் தடுப்பாட்டம் ஆடுகிற ஆளில்லை. படைகளத்திற்குள் நுழைந்து தலைகளை வெட்டிச் சாய்த்து முன்னேற்றம் அடைகிற

ஆள். வெட்டுக் கொடுத்து வெட்டு வாங்குவேன். எனக்கு எப்போதும் ஒருவழி பாதை என்பது கிடையாது. என் ஆட்டம் எதிராளியை வைத்துத்தான் ஆடப்படும். அதனால் என் ஆட்டம் ஒரே மாதிரியாக இருக்காது. அது ஆளுக்கு ஆள் மாறுபடும்.

நானும், மிருளாளணியும் எதிர் எதிராக உட்கார்ந்து ஆட ஆரம்பித்தோம். அவள்தான் முதல் சிப்பாயை நகர்த்தினாள். நான் அவளிடம் தோற்றுப்போவது என்று தீர்மானித்துக் கொண்டேன்.

தோல்வி அவமானம் இல்லை. அது வெற்றியைவிட ஒருபடி மேலானது. அதாவது யாரிடம் தோற்கிறோம் என்பதை பொறுத்தது. பிரியமானவர்களிடம் அதுவும் சிநேகிதிகளிடம் தோற்பது பெருமை. வெற்றியைவிட மேலானது. அதைத் தெரிந்துகொள்ள புத்தி வேண்டும்.

நான் நான்கும் அறிந்தவன். எது பெருமை; எது சிறுமை என்பதை புத்தியாலும் இதயத்தாலும் அறிந்தவன். எனவே தோல்வி அடைவது பற்றி கவலைப்பட்டதே இல்லை. அதுவும் எதிராளி, வேண்டுமென்றே நான் தோல்வி அடைகிறேன் என்பது தெரியாதவாறு - தன் திறமையால் என்னை தோற்கடிப்பது மாதிரி ஒரு பிரேமையை உண்டாக்கிவிட்டு தோற்றுப்பேன். அதில் நான் கில்லாடி. புத்தி பூர்வமாக செயல்படுகிற ஆள். சூழ்ச்சி, தந்திரத்தில் எல்லாம் எனக்கு நம்பிக்கை உண்டு. சூது வெல்லும் என்பது சகுனிக்கு மட்டும் சொந்தமில்லை. சகுனி கந்தகார் ஆப்கானிஸ்தான் ஆள் மட்டுமல்ல. அவன் எல்லா காலத்திலும் எல்லா இடத்திலும் இருக்கிறான். ஆண் ரூபத்தில் இருப்பது போல பெண் ரூபத்திலும் சகுனி உண்டு. நான் சகுனியா என்றால் ஒரு பதில் இல்லை. அதாவது உண்டு என்பது மாதிரி இல்லை என்பதும் உண்டு.



எல்லா ஆணும், எல்லா பெண்ணும் - எப்போதும் ஒன்று இல்லை. ஒன்று போல் இருப்பதால் ஒன்று இல்லை. வித்தியாசமாக இருப்பதால் தனித்தனி என்பது கிடையாது. இடம், காலம் - என்பதற்கு ஏற்ப எல்லா வித்தியாசப்படும். எனவேதான் எதையும் பாம்பு என்று நினைத்து அடிக்கக் கூடாது; அதுபோல பழுதை பாம்பென கருதி மதிக்கக் கூடாது. நான் வாழ்க்கையில் நானாகவே கற்றது அதுதான். எனவே அதை நன்றாகப் பிடித்துக்கொண்டு விட்டேன். பத்துப் பதினொரு வயதில் பிடித்த பிடியை விடாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இருக்கிறேன். வயதென்னவோ நாற்பத்தேழாகிவிட்டது. இன்றும் பிடியை விடவில்லை. விட்டு விடுவேன் என்று சொல்லவும் முடியவில்லை. சிலவற்றைவிட முடியாது; சிலவற்றை பிடிக்க முடியாது. அதுதான் வாழ்க்கை. ஒரு முறை பிடித்தால் சாவு வரையில் அது தொடர்ந்து இருக்கும்.

எதுவும் சாவில் தீர்வு இல்லை.

சாவில் உயிர்தான் போகிறது. பிணத்தோடு பிரச்சினை தீர்வதில்லை. தீயில் பொசுங்கிப்போவது கிடையாது. நெருப்பின் கனல் எத்தனையோ தலை முறைக்கு எரிந்துகொண்டே இருக்கிறது. அது தெரிய வேண்டிய கண்களுக்குத் தெரிகிறது. பார்க்கவேண்டிய கண் பார்க்கிறது; கேட்கவேண்டிய காது கேட்கிறது.

பாரிஜாதம் செத்துப் போய்விட்டாள். அதாவது அவள் உயிரோடு இல்லை. ஆனால் அவள் உயிரோடு இருந்ததைவிட அதிகமாக என்னுள்ளே இருக்கிறாள். என் அண்ணன் மனசில் நிறைந்து இருக்கிறாள். அதை அவன் வெளியில் சொல்வது இல்லை. அதனால் அவள் இல்லை என்று ஆகி விடாது. உயிரோடு இருப்பதாலேயே ஒன்று

இருக்கிறது என்றாகிவிடாது; உயிரோடு இல்லை என்பதால் ஒன்று இல்லாமல் போய்விடாது. இல்லாமல் போவது; இருப்பது இருக்கிற ஆளின் பிரச்சினை. இல்லாமல் உயிர் உள்ளதற்கானது மட்டுமல்ல. உலகத்தில் உள்ள அது எல்லாவற்றுக்குமானது. பிரச்சனை என்பதுதான் சாசுவதம். ஏனெனில் அது இருக்கிறது. தலையில் ஏறி உட்கார்ந்து கொண்டு முடியைப் பிடித்து ஆட்டுகிறது.

நான் ரொம்ப சாமர்த்தியமாக ஆடுவது மாதிரி பாவனை காட்டி ஆடி மருளாளணியிடம் தோற்றுப் போனேன. ஆட்டத்தில் பாவனைதான் முக்கியம். அதுதான் எதிராளியை வெற்றியின் மீது நம்பிக்கைக் கொள்ள வைக்கிறது. நம்பிக்கைத்தான் வெற்றியின் ஆணிவேர். புத்திசாலியான எதிராளிக்கு உன் சாமார்த்தியம் எப்படி இருந்தாலும் தெரிந்துவிடும். சூழ்ச்சி, வஞ்சகம் எதுவும் எடுபடாது என்பது மிருளாளணியிடம் இருந்துதான் எனக்குத் தெரிந்தது. என்னை வென்றதற்காக அவளை எல்லோரும் பாராட்டினார்கள். ஏனெனில் நான் தோல்வியே அடையாமல் வெற்றிமேல் வெற்றி பெற்றுக் கொண்டு வந்தேன். என்னுடைய வெற்றியைத் தடுத்து நிறுத்தி செக் வைத்துவிட்டாள் என டைம்ஸ் ஆப் இந்தியா எழுதியது. அதைப் படித்ததும் லேசாகச் சிரித்துக் கொண்டேன். என் வியூகம் யாருக்கும் தெரியவில்லை என்பது சந்தோஷம் அளித்தது. அறிய முடியாதவனாக இருப்பதில் ஏற்படும் ஆனந்தம். நான் அதை அனுபவித்துக் கொண்டு இருந்தேன்.

கேண்டீனில் மிருளாளணி தேனீர் குடித்துக்கொண்டு இருந்தாள். அவள் முன்னே டைம்ஸ் ஆப் இந்தியா இருந்தது. நான் அவள் எதிரே உட்கார்ந்தேன். அவள் சந்தோஷமாக ஒரு சிரிப்புச் சிரிப்பு சிரித்தார். அது என்னை



நிலைகுலைய வைத்துவிட்டது. நான் பேச்சைவிட சிரிப்பை நம்புகிற ஆள். சிரிப்பின் தொனி பேச்சைவிட மேலானது. பேச்சு என்பது குறைபாடு கொண்டது; சிரிப்பு குறைபாட்டை களைந்திருப்பது. அறிவு இருந்தால்தான் சிரிப்பை அறிந்து கொள்ள முடியும். அவள் சிரிப்பின் மர்மம் எனக்குப் புரிந்தது. வெட்கமாக இருந்தது. வேஷத்தை இன்னொருவர் களைத்து விடுகிறபோது ஏற்படுகிற வெட்கம். வெட்கம் ஆசை அறியாது என்பது சரியல்ல. என் ஆசையை வெட்கம் கொன்றது. தலைகுனிந்து கொண்டேன்.

"பாவம்" என்று டைம்ஸ்ஆப் இந்தியாவை என் பக்கம் தள்ளி வைத்தாள்.

நான் அவள் முகத்தையே பார்த்தபடி இருந்தேன்.

"டீ" என்றாள்

தலையசைத்தேன்.

மிருளாளணி நிஜத்தில் கெட்டிக்காரியாக இருந்தாள். அதாவது நான் எதிர்பார்த்ததைவிட புத்திசாலி. சதுரங்க கட்டத்தில் மட்டுந்தான் என்று இல்லை. டீ குடிக்கும் போதும், நடக்கும் போதும், பேசும் போதும்கூட அவள் புத்திசாலித்தனம் தெரிந்தது. அது அபூர்வம். சாதாரணமாக ஒரு துறையில் கொஞ்சம் புத்திசாலியாக இருக்கிறவர்கள் இன்னொரு துறையில் ஒன்றுமே தெரியாமல் இருப்பார்கள். அதற்கு உதாரணம் தேவை இல்லை. நான் பார்த்துப் பார்த்து சலித்துப் போய் இருக்கிறேன். எனக்குச் சலிப்பு முட்டாள்தனத்தின் மீதுதான். முட்டாள் மீது கிடையாது.

## 3

எங்கள் பள்ளிக் கூடத்தில், ஆண்டு விழாவிற்கு பரமார்த்த குருவின் கதையை அவிவிவேகி பூரண குருவின் கதை என்ற பெயரில் நாடகம் போட்டார்கள். கணக்கு ஆசிரியர் நமச்சிவாயம் எனக்கு மிலேச்சன் வேடம் கொடுத்தார். நாடகத்தில் அவனுக்குத் தான் நிறைய வசனம். நான் நன்றாகப் பேசுவேன். எனவேதான் கொடுத்தார். படித்துப் பார்த்தேன். எனக்கு முட்டாள் தனத்தைச் சகிக்க முடியவில்லை. எல்லா வற்றுக்கும் ஓர் எல்லை உண்டு. பரமார்த்த குருவின் சீடர்கள் எல்லை மீறி இருந்தார்கள். என்னால் தாள முடியவில்லை. நோட்டுப் புத்தகத்தோடு நமச்சிவாயம் முன்னே போய் நின்றேன்.

"மனப்பாடம் பண்ணிட்டியா?" என்று கேட்டார்.

"படித்தேன் எனக்குப் பிடிக்கவில்லை" என்றேன்.

அதனை அவர் எதிர்பார்க்கவில்லை. என் தோள் மீது கைவைத்து, "நல்ல நாடகம் வீரமா முனிவர் எழுதியது. நகைச்சுவை நாடகம்" என்றார்.

"இல்ல சார்" என்று நோட்டுப் புத்தகத்தை அவர் மேசை மீது வைத்துவிட்டு தப்பித்துக்கொண்டு வந்தேன்.



எனக்கு கெட்டது முதலில் தெரியும். அதனால் எதிலும் மாட்டிக்கொள்ள மாட்டேன். ஒரு ஆணுக்கு நல்லது தெரிய வேண்டாம். கெட்டது தெரிந்தால் போதும். நீ தப்பித்துக்கொண்டு விடுவாய். அதுதான் என் கொள்கை. நான் கொள்கையைப் பிரகடனப்படுத்துகிற ஆளில்லை. அது பிரகடனப்படுத்தப்படுவதில்லை. நெஞ்சில் ஏற்றி வைத்துக்கொள்வது. அது எனக்குச் சூரியன்போல வழி காட்டும். நான் இருட்டில் நடக்கிறேன். இருட்டு வெளிச்சம் என்பது தனித்தனியாக இல்லை இரண்டும் ஒன்றுதான். கண்களை மூடிக்கொண்டு சின்ன வயதில் நான் ஆற்றின் கரையில் நடந்து இருக்கிறேன், இலுப்பை மரத்தில் ஏறி காவிரி ஆற்றில் குதித்து இருக்கிறேன்.

இருட்டிற்கு நான் பயந்தது இல்லை. வெளிச்சத்தில் சந்தோஷப்பட்டதில்லை. பயம் என்பதையே அறியாதவன். என் அண்ணன் எல்லாவற்றிற்கும் பயப்படுவான். நான்தான் அவனுக்குத் துணை. நான் அவனை பலமுறை பயமுறுத்தி இருக்கிறேன். சின்ன பையன் மாதிரி பயந்து அழுது இருக்கிறான். அவன் அழுவதைப் பார்ப்பது வேடிக்கையாக இருக்கும். அதனால் நான் பேய்க்கதை எல்லாம் சொல்லி அவனை இன்றும் பயமுறுத்துவேன். என் கதைகளில் பேய் வானத்திற்கும் பூமிக்கும் இடையில் பறந்துபோகும். பயப்படுகிற பையன்களை, அழுகிற சிறுமிகளைத் தூக்கிக் கொண்டுபோய் குரல்வளையில் கடித்து ரத்தம் குடிக்கும். இந்தக் கதையெல்லாம் எனக்கு யாரும் சொல்லிக் கொடுத்தது இல்லை. நானாகக் கற்றுக்கொண்டது. ஒரோர் சமயம், என் கதைகள் எனக்கே ஆச்சரியமூட்டும். யாருக்கோ சொல்வது மாதிரி, என் கதைகளை எனக்கே சொல்லிக்கொள்வேன்.

நான் கதைச் சொல்வதைக் கேட்டுவிட்டுத் தான்

நமச்சிவாயம் எனக்குப் பரமார்த்தகுரு நாடகத்தில் வேஷம் கொடுத்தார். பேய்வேறு; முட்டாள் வேறு. பேய்கள் என்னைப் பிடிக்கமுடியாது; ஆனால் பேய்க்கதைகள் எனக்குப் பிடிக்கும்.

ஒருநாள் இரவில் பாரிஜாதத்தை மார்பில் சாய்த்துக் கொண்டு ரத்தக்காட்டேரி கதைச் சொன்னேன். அவள் பயந்துபோய் என் மேலே ஏறி படுத்துக்கொண்டு கழுத்தைக் கட்டிக்கொண்டு, "வேணாம்... வேணாம்... பயமாக இருக்கிறது" என்று என் உதட்டில் முத்திட்டாள்.

உலகத்திலேயே ரொம்பப் பயப்படுகிற ஆள் மனிதன்தான். மனிதன் என்றால் அதில் மனுஷியும் உண்டு.

மனித பயத்தைப் பற்றி எத்தனைத்தான் சொன்னாலும் முழுதாகச் சொன்னதாகாது. அதாவது மனிதன் பயப்படாத இடமில்லை; நேரமில்லை. கூட்டத்தில் இருந்தாலும் பயப்படுவான்; தனியாக இருந்தாலும் பயப்படுவான். புலிக்கப் பயப்படுவது மாதிரியே எலிக்குப் பயப்படுவான். பூமியில் நெளிகிற புழு பூச்சிக்கும் பயப்படுவான். பயம் என்பது அவனோடு பிறந்தது. பிரியமானவர்கள் சாவதைப் பார்த்துவிட்டு, தனக்குச் சாவு வந்துவிடுமோ என்று பயப்படுகிறான்.

நான் நிறைய சாவைப் பார்த்து இருக்கிறேன். எனக்கு அதன் மீது பயமில்லை. ஆசையில்லை. வெறுப்பு துளிகூட கிடையாது. எதன்மீது உனக்குப் பற்று இல்லையோ அதன் மீது பயம் வராது. எனக்கு வாழ்வும் சாவும் ஒன்றுதான். பிறந்தால் இறக்கவேண்டும். இறந்தால் பிறக்கவேண்டும். உன் சாவு உன் கணக்கைத் தீர்த்துவிடுகிறது. அதாவது நீ இல்லை. நீ இல்லையே தவிர மற்றதெல்லாம் இருக்கிறது. ஆனால் பிரயோசனமில்லை.



வாழ்க்கையே பிரயோசனமில்லாதது தான். அது ஒன்றுமில்லை. இறப்பும், பிறப்பு ஒரு நிகழ்வு. காலம் காலமாக நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. அதற்கு அர்த்தம் கற்பிக்க அறிவாளிகள் என்று யார் யாரோ கிளம்பி என்னென்னவோ சொல்லிவைத்து இருக்கிறார்கள். எதுவும் சல்லிக்காசுக்கு பெறுமானம் இல்லை. மழைய கதைதான். ஆனால் வாழ்க்கையில் பழயது, புதியது என்று ஒன்று இல்லை. வாழவேண்டும்.

நம் நாட்டில், நம் ஊரில் என்றுதான் இல்லை. எல்லா நாட்டிலும், எல்லா ஊரிலும் பைத்தியங்கள் உண்டு. நாடென்று ஒன்று இருந்தால் அதில் பைத்தியம் என்று ஒன்று உண்டு. அதில் என்ன சிரமமென்றால், பைத்தியத்திற்குத் தான் பைத்தியம் என்பது தெரியாது. அது விசித்திரம் இல்லையா? உலகத்தில் உள்ள எத்தனையோ விசித்திரங்களில் அறியாமை ஒன்று. அதை அழிக்க ஒழிக்க முடியாது. அதைத் தெரிந்துகொண்டு விட்ட உடனே, நான் ஞானி ஆகிவிட்டேன்.

ஞானிக்கு எதன் மீதும் வெறுப்பு கிடையாது. அவனுக்கு நெருப்பும், நீரும் ஒன்றுதான். பயமும் தைரியமும் ஒன்றுதான். இறப்பும் பிறப்பும் ஒன்றுதான்.

மிருளாளணி. பாரிஜாதம் - எல்லாம் எனக்கு வெறும் பெயர்களே. அவர்கள் மீது இருந்து மோகம் வடிந்து விட்டது. ஆசை தீயில் பொசுங்கிப் போய்விட்டது.

நான் நானாகி விட்டேன்.

நான் எதுவும் இல்லை. அறிந்தது அறியாதது என்பது எல்லாம் ஒழிந்து போய்விட்டது.

## 4

கங்கைக் கரையில் கீதாபவன் வாசலில் நின்று கொண்டு பிரவாகித்து ஓடும் கங்கையைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். எதிர் கரையில் இருந்து ஐந்தாறு பேர்கள் படகில் வந்து கரையேறினார்கள். அவர்களைப் பார்த்தால் ஏதோ படம் பிடிப்பவர்கள் மாதிரி இருந்தது. காமிரா, மைக், லைட் என்று பலவிதமான சாதனங்களை எடுத்துக் கொண்டு வந்தார்கள் நான் ஒதுங்கி அவர்களுக்கு வழிகொடுத்தேன். இம்மாதிரி கங்கையைப் படம் எடுக்கும் இரண்டு மூன்று குழுவை நான் பார்த்து இருக்கிறேன்.

அவர்களுக்கு நான் ஒரு பொருட்டே இல்லை. எது முக்கியம் என்று நினைக்கிறார்களோ அதைப்படம் பிடித்துக் கொண்டு போவார்கள். எனக்கு பேட்டி, படம் என்பது மேல் எல்லாம் ஈடுபாடே கிடையாது.

நான் கங்கைக்கு வந்து இருக்கிறேன். எனக்குக் கங்கைதான் முக்கியம். பார்க்கப் பார்க்கப் பரவசம் கூடியது. காலம் காலமாகக் கங்கையில் தண்ணீர் ஓடிக் கொண்டு இருக்கிறது. காற்று வீசுகிறது. சூரியன் காய்கிறது. அதில் எதுவும் பழசு இல்லை. முன்னே பாய்ந்தோடிய தண்ணீர் திரும்பி வருவது இல்லை. அதுதான் முக்கியம். எது முக்கியமோ அதைத் தெரிந்து கொள்ளவேண்டும். பலா பழத்தில் சுளைதான் முக்கியம்,



அதுதான் இனிக்கும். கொட்டை மறுபடியும் உயிர்க்கும். அது இயல்பு. அறிந்துகொள்ளவேண்டும். அறிய அறிய அறிவு தெளிவுபெறும். தெளிவு பிறக்கப் பிறக்க வாழ்க்கையின் எல்லைகள் விரியும். ஜீவிதம் சாசுவதமாகும்.

நான் மனிதன். சாசுவதமானவன். சாவு என்பதையே காணாதவன். அற்பப் பதர்கள் செத்தொழியும். புத்திசாலி ஜீவிதமாக இருக்கிறான். எவன் ஜீவிதமான சிரஞ்சிவியோ அவனே நான். அறிந்ததால்; புத்தியால் தெளிந்ததால் சொல்கிறேன். அறிவு ஓர் அறிவென்றால் அதைச் சொல்வது இன்னொரு அறிவு.

பாண்டியன் என்னிடம், "உன் அறிவுதான் உனக்கு சத்ரூ" என்றான். பாவம், ஏதும் தெரியாதவன். அன்பானவன். அன்பானவனுக்கு அறிவு இல்லாததற்காக நான் கோபித்துக்கொள்ள மாட்டேன். அம்மா மீது - பெற்றெடுத் தாய் மீது புத்தியில்லை என்று மகனுக்குக் கோபம் வருமா? அம்மாவென்றால் அன்புதான். பூரணமான அன்பு. பெற்ற மகன் மறந்தாலும் மகனை மறக்காத அன்பு. அன்பின் சொரூபம் என்றால் அம்மாதான். அது உன் அம்மா; என் அம்மா இல்லை. உலகம் முழுவதற்கும் ஒரு அம்மாதான் இருக்கிறது.

அம்மாவை அறியாதவன் சர்வ முட்டாள். அவனுக்கு என்ன இருந்தாலும் ஒன்றுமே இல்லாதவன் என்பது மட்டுமல்ல - உலகத்தில் ஜீவிக்கவே தகுதி இல்லாதவன். நான் யார், யாரையோ மன்னித்திருக்கிறேன்; ஆனால் தாயின் அன்பை அறிந்துகொள்ளாதவனை மன்னிக்கவே மாட்டேன்.

அம்மா என்கிற போதெல்லாம், சின்ன வயதில் படித்த ஒரு வாசகந்தான் நினைவிற்கு வருகிறது. அது

எனக்குச் சொன்னது இல்லை; உனக்குச் சொன்னது இல்லை. எல்லோர்க்கும் சொன்னது. நாடு, நகரம், கிராமம், தெரு, வீடு - என்று எல்லா இடத்திற்கும் பொதுவாகச் சொன்னது. எது பொதுவானதோ அதுதான் உயர்ந்தது; மேலானது. திரும்பத்திரும்ப சொல்லப் படுவதாலேயே ஜீவிப்பது. ஜீவிப்பது என்றால் கண்டதைத் தின்று சாவு வரும்வரையில் காலந்தள்ளுவது இல்லை. ஒரு வண்ணத்துப்பூச்சியைப் போல ஆனந்தமாக சிறகை அடித்துக்கொண்டு மலர்க்கு மலர்த்தாவி தேன் குடித்துக் கொண்டு வாழ்ந்தபடி செத்துப்போவது. வாழ்வது மாதிரியே சாவும் மகத்துவமானது;

வாழ்வு நன்று; சாவு இனிது.

என் தலைக்கு மேலாக ஒரு பருந்து பறந்து சென்றதின் நிழல் தெரிந்தது. கங்கைக் கரையில் அடிக்கடி கழுகைப் பார்க்கிறேன். நான் கொடுத்து வைத்தவன். பணக்காரர்களின் மத்தியில் கோடீஸ்வரனாகவும் வீரர்களின் இடையில் மாவீரனாகவும் இருக்கிறேன் என்பது மட்டுமல்ல - கதைத் தெரிந்து வைத்துக்கொண்டு ஆமை மாதிரி அடக்கமாக இருக்கிறேன். ஆமையின் வேகம் அற்பமா? அது துள்ளிப்பாயும் முயலை வென்றது தந்திரமா? சூழ்ச்சியா? அது எதுவோ? அதுவோ வெற்றி. முயல் தோற்பதும்; ஆமை வெற்றி பெறுவதும் விதி. அதை மாற்ற முடியாது. அறிய அறிய மனத்தில் ஆனந்தம் பொங்கி கங்கையில் தண்ணீர் ஓடுவது மாதிரி பாய்ந்தோடியது. தலையை சிலுப்பிக்கொண்டு ஒருமுறை கண்களை மூடித்திறந்தேன்.

முன்னே ஒரு இளம்பெண் - பார்க்க மிருளாளனி மாதிரியும், பாரிஜாதம் போலவும் ஒருத்தி நின்றுகொண்டு இருந்தாள். என்மீது சந்தோஷமாக ஒரு வசீகர



புன்னகையை வீசினாள். வாள்கொண்டு இதயத்தைக் குறுக்காக வெட்டி சாய்ப்பது மாதிரி இருந்தது. சமாளித்துக் கொண்டு மெல்ல புன்னகைப் பூத்தேன்.

"சுவாமி, நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?" என்று கேட்டபடி மைக்கை முன்னே நீட்டினாள்.

பெண்கள் என்றால் - அவர்கள் என்ன கேட்டாலும், என்ன பேசினாலும் நான் கோபித்துக்கொள்ள மாட்டேன். அதுவும் இளம் பெண்யென்றால் என் இதயம் உருகி ஆறாக ஓடும். அது இன்று நேற்று இல்லை. எனக்கு நினைவு தெரிந்ததில் இருந்து அப்படித்தான் இருக்கிறேன். அதில் என் பங்கு என்னவென்றால், நான் அதைத் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

மேக்னா கண்களை சிமிட்டியபடி புன்சிரிப்போடு மைக்கை என் பக்கம் நீட்டினாள். அவள் துடிப்பும் பரபரப்பும் என்னை களிகொள்ள வைத்தது. நான் அவளை வசீகரித்துவிட்டதை ஒரு கணத்தில் தெரிந்து கொண்டேன். அலகிலா விளையாட்டை உடையவன் நான்; ஆடி களிப்பதும் - கூடி ஆடுவதும் எனக்குப் பிடிக்கும். பிடித்ததைப் பிடித்ததென்றும், பிடிக்காததைப் பிடிக்க வில்லை என்று சொல்லக் கூடியவன்.

அவள் இடுப்பில் கை போட்டு வளைத்து இறுக அணைத்து செஞ்சாயம் பூசியிருந்த இதழ்களில் முத்தமிட்டேன். அவள்கூட இருந்த தாடிக்காரன் திடீரென்று பாய்ந்து என் நெற்றில் அடித்தான். நான் நிலை குலைந்து கீழே சாய்ந்தேன். அவள் பதறியபடி பின்னால் நகர்ந்தாள். நிலைமை ஒரேயடியாக மாறிபோய்விட்டது எனக்குப் புரிந்தது. தாடிக்காரன் என் நெஞ்சில் மிதிக்க காலை மேலே தூக்கினான். அவள் முன்னே பாய்ந்து அவனைப் பின்னால் தள்ளினாள்.

அவள்தான் பெண். இரக்கம் என்பதின் மறுபிறப்பு. நான் தரையில் கையூன்றி எழுந்தேன்.

"சரி" என்றாள் மேகலா.

நான் பதிலொன்றும் சொல்லாமல் தோப்பை நோக்கி நடக்கலானேன். நடக்க நடக்க மனத்தில் சந்தோஷம் கூடியது. கைகளை வீசியபடி வேகமாக நடந்தேன். எனக்கு முன்னே கங்கை பிரவாகித்து ஓடிக் கொண்டிருந்தது. என் துயரத்தை கங்கை அடித்துக்கொண்டு போய்விட்டது. எதில் உனக்கு ஈடுபாடு இல்லையோ அது உன்னோடு இருக்காது.

நான் எப்போதும் ஆனந்தமானவன். ஆனந்தம் வாழ்க்கையின் ஊற்று. உயிர் வாழ்வதின் பொருள். நான் அவளை அணைத்த கணத்தில் மகிழ்ச்சியாக இருந்தேன். என்னைப் போல அவளும் மகிழ்ச்சியாக இருந்தாள். அதுதான் வாழ்க்கை. வாழ்க்கை என்பது ஓராள் சம்பந்தப்பட்டது இல்லை. இரண்டு ஆள், அதுவும் பெண்ணும் ஆணும் சம்பந்தப்பட்டது. அதில் உயர்வு தாழ்வு இல்லை. எல்லாம் தாழ்ந்தது; இல்லாவிட்டால் எல்லாம் உயர்ந்தது. நான் எதைப் பற்றியும் அதிகமாக யோசிக்க மாட்டேன். கருத்து, சிந்தனை புத்திசாலித்தனம் என்பது மேலெல்லாம் எனக்கு நம்பிக்கைக் கிடையாது.

பிறப்பின் ரகசியம் தெரியாதது போலவே இறப்பின் மர்மமும் புரியாது. இறப்பிற்கும் பிறப்பிற்குமிடையில் வாழ்க்கை ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறது.

ஊஞ்சல் ரசமானது. ஆடுவது அற்புதமானது. ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும் நான் என் இளம் பருவத்தைக் காவிரிக் கரையில் கழித்து இருக்கிறேன். புங்கமரத்திற்கும் பூவரச மரத்திற்கும் இடையில் ஊஞ்சல் கட்டி ஆடியிருக்கிறேன். ஆட்டமென்றால் அப்படியொரு ஆட்டம். தலைசுற்றுகிற வேகம். எனக்கு எப்போதும் வேகம் பிடிக்கும். ஆடுவது, ஓடுவது எல்லாம் வேகந்தான். பறப்பதும் நீந்துவதும் எனக்குப் பிடிக்கும். புங்க மரத்தில் இருந்து பறந்துபோய் ஆற்றில் பாய்ந்து நீச்சலடித்துக் கொண்டு போவேன்.



காவிரி ஆற்றில் குளிக்கும் ஆண்களும் பெண்களும் நான் பறப்பதைப் பார்த்து பயந்து அலறுவார்கள். அவர்களை பதற அடிப்பதில் எனக்கு சந்தோஷம். அதுவும் எல்லை இல்லாத மகிழ்ச்சி. என் தைரியம், சாகசம் பதற வைக்க வைக்க நான் மேலும் மேலும் அவர்களை மிரள வைக்க ஆரம்பித்தேன். என் பெயர், ஊர் முழுவதும் பரவிட்டது. அது தெரிந்ததும், நான் ஒன்றுமே தெரியாதவன் மாதிரி அடங்கி அமைதியாகிவிட்டேன். அடிப்படையில், நான் வித்தியாசமான ஆள். நல்லதோ, கெட்டதோ, உயர்ந்ததோ, மட்டமானதோ - எதையும் தொடர்ந்து செய்யமாட்டேன். அதுவும் ஒரு காரியம் என்னால் தான் முடியும் என்றால் - அதைத் திரும்பத் திரும்ப செய்யமாட்டேன். முட்டாளுக்கும் எனக்கும் அதுதான் வித்தியாசம். என்னையே நான் பின்பற்ற மாட்டேன்.

நான், அதை அறிந்துகொண்டு இருக்கிறேன். அதுதான் நான். எனக்கு ஒருவழி, ஒரு பாதை என்பது கிடையாது. பிடிக்கிறது; பெருமையானது என்பதற்காக எதையும் திரும்பத்திரும்ப செய்யமாட்டேன். நான் செய்த காரியத்தைப் பற்றி பெருமைப்பட்டுக் கொண்டாலும் - அதுபற்றி நான் பேசமாட்டேன். ஏனெனில் அதைவிட பெரிய காரியத்தைச் செய்யக்கூடியவன் நான். என்

அவள்தான் பெண், இரக்கம் என்பதின் மறுபிறப்பு. நான் தரையில் கையூன்றி எழுந்தேன்.

"சாரி" என்றாள் மேக்னா.

நான் பதிலொன்றும் சொல்லாமல் கீதாபவன் நோக்கி நடக்கலானேன். நடக்க நடக்க மனத்தில் சந்தோஷம் கூடியது. கைகளை வீசியபடி வேகமாக நடந்தேன். எனக்கு முன்னே கங்கை பிரவாகித்து ஓடிக் கொண்டிருந்தது. என் துயரத்தை கங்கை அடித்துக்கொண்டு போய்விட்டது. எதில் உனக்கு ஈடுபாடு இல்லையோ அது உன்னோடு இருக்காது.

நான் எப்போதும் ஆனந்தமானவன். ஆனந்தம் வாழ்க்கையின் ஊற்று. உயிர் வாழ்வதின் பொருள். நான் அவளை அணைத்த கணத்தில் மகிழ்ச்சியாக இருந்தேன். என்னைப் போல அவளும் மகிழ்ச்சியாக இருந்தாள். அதுதான் வாழ்க்கை. வாழ்க்கை என்பது ஓராள் சம்பந்தப்பட்டது இல்லை. இரண்டு ஆள், அதுவும் பெண்ணும் ஆணும் சம்பந்தப்பட்டது. அதில் உயர்வு தாழ்வு இல்லை. எல்லாம் தாழ்ந்தது; இல்லாவிட்டால் எல்லாம் உயர்ந்தது. நான் எதைப் பற்றியும் அதிகமாக யோசிக்க மாட்டேன். கருத்து, சிந்தனை புத்திசாலித்தனம் என்பது மேலெல்லாம் எனக்கு நம்பிக்கைக் கிடையாது.

பிறப்பின் ரகசியம் தெரியாதது போலவே இறப்பின் மர்மமும் புரியாது. இறப்பிற்கும் பிறப்பிற்குமிடையில் வாழ்க்கை ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறது.

ஊஞ்சல் ரசமானது. ஆடுவது அற்புதமானது. ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும் நான் என் இளம் பருவத்தைக் காவிரிக் கரையில் கழித்து இருக்கிறேன். புங்கமரத்திற்கும்



பூவரசு மரத்திற்கும் இடையில் ஊஞ்சல் கட்டி ஆடியிருக்கிறேன். ஆட்டமென்றால் அப்படியொரு ஆட்டம். தலைசுற்றுகிற வேகம். எனக்கு எப்போதும் வேகம் பிடிக்கும். ஆடுவது, ஓடுவது எல்லாம் வேகந்தான். பறப்பதும் நீந்துவதும் எனக்குப் பிடிக்கும். புங்க மரத்தில் இருந்து பறந்துபோய் ஆற்றில் பாய்ந்து நீச்சலடித்துக் கொண்டு போவேன்.

காவிரி ஆற்றில் குளிக்கும் ஆண்களும் பெண்களும் நான் பறப்பதைப் பார்த்து பயந்து அலறுவார்கள். அவர்களை பதற அடிப்பதில் எனக்கு சந்தோஷம். அதுவும் எல்லை இல்லாத மகிழ்ச்சி. என் தைரியம், சாகசம் பதற வைக்க வைக்க நான் மேலும் மேலும் அவர்களை மிரள வைக்க ஆரம்பித்தேன். என் பெயர், ஊர் முழுவதும் பரவிட்டது. அது தெரிந்ததும், நான் ஒன்றுமே தெரியாதவன் மாதிரி அடங்கி அமைதியாகிவிட்டேன். அடிப்படையில், நான் வித்தியாசமான ஆள். நல்லதோ, கெட்டதோ, உயர்ந்ததோ, மட்டமானதோ - எதையும் தொடர்ந்து செய்யமாட்டேன். அதுவும் ஒரு காரியம் என்னால் தான் முடியும் என்றால் - அதைத் திரும்பத் திரும்ப செய்யமாட்டேன். முட்டாளுக்கும் எனக்கும் அதுதான் வித்தியாசம். என்னையே நான் பின்பற்ற மாட்டேன்.

நான், அதை அறிந்துகொண்டு இருக்கிறேன். அதுதான் நான். எனக்கு ஒருவழி, ஒரு பாதை என்பது கிடையாது. பிடிக்கிறது; பெருமையானது என்பதற்காக எதையும் திரும்பத்திரும்ப செய்யமாட்டேன். நான் செய்த காரியத்தைப் பற்றி பெருமைப்பட்டுக் கொண்டாலும் - அதுபற்றி நான் பேசமாட்டேன். ஏனெனில் அதைவிட பெரிய காரியத்தைச் செய்யக்கூடியவன் நான். என்

ஒவ்வொரு அடியும் முன்னே பாய்வது? முன்னே பாய்கிறவன், பின்னால் திரும்பிப் பார்த்துக்கொண்டு இருக்கக்கூடாது. நான் பதித்துவிட்டு வருகின்ற சுவடுகள் எனக்காக இல்லை. அது மற்றவர்களுக்கு; பின்பற்ற ஆசைப் படுகிறவர்களுக்கு. அறிந்து நடந்தால் வாழ்க்கை என்பதின் சூட்சமத்தைத் தெரிந்துகொண்டுவிடலாம்.

நான், யாரையும் அறிவாளியாக நம்புவதில்லை; அதுபோல முட்டாளாகவும் நினைப்பது இல்லை. மனிதன் இரண்டு கலந்து ஒரு ஜந்து. அவனிடம் இரண்டு குணமும் இருக்கின்றன. அதில் எதை எப்போது பிரயோகிப்பான் என்பதுதான் அறிய முடியாது. அடிக்க வேண்டுமென்று நினைத்தாலும் பாய்வான்; இன்னொருவர் தாண்டி விட்டாலும் கடித்து குதறிவிடுவான். மனிதனைப்பற்றி எவ்வளவோ எழுதப்பட்டும் பேசப்பட்டும் இருக்கிறது. ஆனால் எதுவும் ஒரு மனிதனைப்பற்றி முழுசாக சொல்லி விடவில்லை. எவ்வளவு சொன்னாலும், அவனைப்பற்றி அதில் சொல்லாமல் விட்டதுதான் அதிகம். அதற்கு இன்னொருவன் எதற்கு?

நானே, சாட்சி. நான் இருக்கிறேன்.

என்னைப் பற்றி நான், எவ்வளவோ சொல்லி இருக்கிறேன். நான் சொன்னதை எல்லாம் வைத்துக் கொண்டு பார்க்கும்போது சொல்லாமல் விட்டதுதான் அதிகம். அது, எனக்குத் தெரிகிறது. மற்றவர்களுக்கு நான் அதிகமாகச் சொல்லிவிட்டது மாதிரி தெரிகிறது. அதுதான் பிரச்சினை. பிரச்சினைக்கு எலலாம் காரணமாக பிரச்சினை. அறிந்ததும் - அறியாததற்குமான பிரச்சினை.

நான் மூன்று நாட்களாக கங்கைநதிக் கரையில் சுற்றிக் கொண்டு இருக்கிறேன். எத்தனையோ முகங்களை - அதில்



குடிகொண்டு உள்ள துயரத்தைக் கண்ணுற்று பதறி இருக்கிறேன்.

நான் கண்ட வரையில் மனிதர்கள் மகிழ்ச்சியாக இல்லை. அதிலும் பெண்கள் துயரத்தோடும், களைப்போடும் இருக்கிறார்கள் என்பதை அறிய அறிய என்னால் தாளவே முடியவில்லை. பத்துப் பன்னிரண்டு வயது வரையிலும் களிப்போடு இருக்கும் பெண்கள், யுவதியானதும் பயத்தில் மூழ்கி, துயரத்தில் ஆழ்ந்து போய் விடுகிறார்கள். அம்மா, அத்தை, அக்கா, தங்கை என்று ஒவ்வொருவரும் வந்து போவார்கள். அதற்கு முடிவு என்பதே இல்லை. அதுபோல தொடக்கம் என்பதும் கிடையாது. அது இருக்கிறது. அவ்வளவுதான். நான் அதைத் தெரிந்து வைத்துக்கொண்டு இருக்கிறேன்.

நான் ரிஷிகேஷ் வந்து இரண்டாவது நாள் மழை பிடித்துக்கொண்டது. அப்பொழுது நான் மலைமேல் ஏறி கொண்டிருந்தேன். மலை, காடு எல்லாம் எனக்குப் பழக்கமில்லை. ஆனாலும் அவற்றின் மீது அக்கறை இருந்தது. அதுதான் நான். தெரியாதது, புரியாதது என்று எதையும் தூர ஒதுக்கி வைக்கமாட்டான். உள்ளே நுழைந்து தெரிந்துகொண்டு விடுவேன். உலகத்தில் மர்மம் என்பது ஏதுமில்லை. மறைக்கப்பட்டு உள்ளது. திரைபோடப்பட்டு இருக்கிறது. விரும்பினால் திரையைக் கிழித்து காண வேண்டியதைக் கண்டுகொண்டு விடலாம்.

ஓர் உள்ளுணர்வு என்னை மலையில் இருந்து கீழே இறங்கவைத்தது. வேகவேகமாகக் கீழே இறங்கினேன். ஏறும்போது இருந்த சிரமம் இறங்கும்போது இல்லை. வெகு சீக்கிரமாகவே கங்கையின் கரைக்குவந்து விட்டேன். மலை, ஆறு, வனம், வானம் - எல்லாம் இருண்டு இருந்தன. அதாவது எல்லாம் நன்றாகத் தெரிந்தது. இருண்டு கருத்த

வெளியில் நான் இருந்தேன். மழைபொழிய ஆரம்பித்தது. ஏதோ வானத்தில் இருந்து கம்பி இறங்குவது மாதிரி மழை கொட்டியது. தரையில் என் கால்கள் வழுக்கின. பாதம் மண்ணில் பதயவில்லை. உருண்டு கங்கையில் விழுந்து விடுவேன் என்று நினைத்தேன். ஆனால் பயப்பட வில்லை. நான் பத்துப் பன்னிரண்டு வயதிலேயே பயம் என்பதை ஒழித்துவிட்டேன். எனக்கு எதன்மீதும் பயம் கிடையாது. அதுபோல ஆசையும் கிடையாது. நம்புவது சிரமமாக இருக்கும். அதுதான் மெய்க்கும் பொய்க்கும் உள்ள வித்தியாசம். பொய்யை மெய்யென நம்புவது எளிது. ஏனெனில் அப்படியே அது நம்பப்பட்டு வருகிறது.

நான் மழையில் நனைத்துக்கொண்டே ஆசிரமத்திற்கு வந்தேன். அது ஏதோ பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக ரிஷிகேஷியில் சுற்றிவருவது போல நடந்தது. எது, எப்படி நடக்கவேண்டுமோ அது அப்படி நடக்கும். எல்லாம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதுதான். அதில் மாறுதல் கிடையாது. தெரியாது என்பதற்காக எதுவும் இல்லாமல் போவதில்லை. நான் மறுபடியும் மறுபடியும் எனக்கே சொல்லிக்கொள்வது அதுதான்.

தியாகு, உன்னையே நீ நம்பு என்பதுதான்.

நம்பிக்கை இன்னொருவரிடம் இருந்து வரவேண்டியதில்லை. என்னை நானே உற்சாகப்படுத்திக் கொள்வேன். அந்தத் தந்திரம் சாமார்த்தியம் எனக்குண்டு. அதனாலேயே நான் வாழ்கிறேன். வாழ்கிற கலை அதுதான்.

ஆசிரமத்தில் மின்சாரம் போய்விட்டது. மெழுகு வர்த்தி எரிந்துகொண்டு இருந்தது. நான் நனைத்த உடையோடு உள்ளே சென்றேன்.



ஒரு மகாராஜ், என்னைப் பார்த்து, "நீங்கள் மழையில் மாட்டிக்கொண்டு விட்டீர்களோ என்று பயந்தேன். புது இடம். மலையில் ஏறி இறங்குவது சிரமம். மூன்று மாதத்திற்கு முன்னால் ஒரு இளம்பெண் காலிடறி கங்கையில் விழுந்து போய்விட்டாள் என்றார்.

அவர் அன்பு என்னை நெகிழ வைத்தது. அவா யாரோ; நான் யாரோ? மறுபடியும் அவர் என்னையும் - நான் அவரையும் பார்க்கப் போவதில்லை. லாபம், நஷ்டம் என்பது இரண்டு பேர்களுக்கும் கிடையாது. அதுவே இணைத்து இருக்கிறது. மெல்லிய நூலால் எட்டுக்கால் பூச்சியின் வலைபோல பின்னிக்கொண்டிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் கண்களுக்குத் தெரியாத கயிறுகளால் பின்னிப்பிணைத்து கட்டப்பட்டிருக்கிறோம்.

"உங்களுக்காக கங்கை மாதாவை வேண்டிக் கொண்டே இருக்கிறேன்" என்றார் மகராஜ். நான் நெகிழ்ந்து போனேன். அந்தக் கணம் நான் செத்திருந்தால்கூட நன்றாக இருந்திருக்கும். வான் மழையில் நனைந்து கரை புரண்டோடும் கங்கைநீரில் அடித்துக்கொள்ளப்பட்டு போயிருப்பேன். அது பெரும் பாக்கியம். நல்வினைச் செயல். எல்லோருக்கும் கிடைப்பது இல்லை. பாக்கிய வான்கள், பாக்கியம் பெறுகிறார்கள்.

ஆதிசங்கரர் ரிஷிகேஷ் வழியாகத்தான் நடந்துபோய் இருக்கிறார். அவர் காலடிச் சுவடுகளை பின்பற்றித்தான் நான் நடந்து கேதார் போவதாக இருக்கிறேன். அவர் சுவடுகள் எனக்குத் தெரியும். நான் அதைக் கண்டு பிடித்துவிடுவேன். சங்கரர் காலடிச் சுவட்டை யாராலும் அழிக்க முடியாது. காலத்தின் குறி அதன் மீது படிய முடியாது என்பதுதான் சிறப்பு.

மனசை சரியாக வைத்துக்கொண்டால் உடம்பு சரியாக இருக்கும். உடம்பு மனதில்லை இல்லை. ஆனால் மனசு உடம்பு. மனசுதான் உடம்பை பாதிக்கிறது.

ஆசிரமத்தில் மூன்று நாட்கள் முடிந்துவிட்டன. என் பையைத் தூக்கிக்கொண்டு மகராஜ்விடம் சென்றேன். பற்றுப்பாசம் எல்லாவற்றையும் ஒன்றுபோல் பாவிக்க வேண்டு என்று கற்பிக்கப்பட்ட மகராஜ் என்னைப் பார்த்து புன்னகைப் பூத்தார். சன்னியாசி சிரிக்கக்கூடாது தூக்கப்படக்கூாது. சாவு, வாழ்வு என்ற இரண்டிற்கும் சன்னியாசிக்கு ஒருபொட்டே இல்லை. இரண்டும் ஒன்றுதான். எதனிடமும் மாட்டிக்கொள்ளக்கூடாது.

இல்லை, அது இல்லை. உண்டென சொல்லப்படும் எதுவும் இல்லை. அப்படியே இல்லையென சொல்லப்படும் எதுவும் இல்லாமல் போவதில்லை.

"மகராஜ், மூன்று நாட்கள் முடிந்துவிட்டன. புறப்படுகிறேன்!"

"இன்றும் மூன்று நாட்கள் இருக்கலாம்."

"நான் அதிகமான நாட்கள் தங்கிவிட்டது மாதிரி இருக்கிறது" என்ற மகராஜை கையெடுத்து கும்பிட்டேன். என் மனசு ஆசிரமத்தை காலிசெய்துவிட்டது. நான் எதையும் வழக்கம் சம்பிரதாயம் என்பதற்காகச் செய்வதில்லை. பழக்கமும் வழக்கமும் சிக்கலில் மாட்டி வைத்துவிடும். அதில் மாட்டிக் கொண்டால் சந்தோஷம் போய்விடும். ஆனந்தம் அபகரிக்கப்பட்டுவிடும். ஒன்றை அடைய இன்னொன்றை இழக்கக்கூடாது. நான் அந்த விஷயத்தில் கவனமாக இருப்பேன்.



## 5

"தியாகு, நீ பலேகிள்ளாடி. ஒன்னுலியும் மாட்டிக்க மாட்டே" என்று பாண்டியன் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பான்.

நான் எதற்கு உண்டு, இல்லை என்று பதில் சொல்ல மாட்டேன். எதுவும் ஒரு பொருள், ஒரு நோக்கம், ஒரு கருத்துக் கொண்டதில்லை. எல்லாம் ஒன்றுக்குள் ஒன்றாக இருக்கிறது. பிரித்து இன்னொன்று என்று அறிய முடியாத விதத்தில் இருக்கிறது. எது எப்படி இருக்கிறதோ அதை அப்படியே பார்க்கவேண்டும்.

பார்க்கிற கண் ஒன்றுதான் என்றாலும் எல்லா பார்வையும் ஒரு பார்வை இல்லை. நான் கண்களால் பார்க்கிற ஆளில்லை. எதையும் மனசால் பார்க்கிறவன். மனசால் பார்க்க முடியுமா என்றால் முடியுமென நான் சொல்வேன். ஏனெனில் நான் மனசால் தான் ஒவ்வொன்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறேன் பாண்டியன் எல்லாவற்றையும் கண்களால் பார்க்கிறவன். கண் பார்வைக்கு எல்லை உண்டு; ஒரு தொலைவிற்கு மேல் கண்ணால் பார்க்க முடியாது. அதுதான் அவன் பிரச்சினை. ஆனால் அது என் பிரச்சினை இல்லை. நான் அதைத் தெரிந்து வைத்துக்கொண்டு இருக்கிறேன். அவன் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறான்.

இதுதான் வாழ்க்கை. எனக்குத் தெரிகிறது. அவனுக்குத் தெரியவில்லை என்பதற்காக நான் கோபித்துக்

கொள்வதில்லை. தெரிந்தவன் பாக்கியசாலி என்று தெரியாதவன் மகா பாக்கியசாலி என்று ஒரு பாண்டியனிடம் சொல்வேன். அவன் முகம் சுண்டி போ விட்டது. என்னைப் பரிதாபமாகப் பார்த்தான். அ தவிப்பும் இயலாமையும் தெரிந்தது. என் முட்டா தனத்தின் மீது எனக்கே வெறுப்பு ஏற்பட்டது.

நான் அறிவாளி என்பதை அறிந்து இருப் போலவே முட்டாள் என்பதையும் அறிந்து வைத்து கொண்டிருக்கிறேன். ஒரு ஆள் எப்போதும் முட்டா இல்லை. அதுபோல எப்போதும் அறிவாளி இல்லை. ஒ நேரத்தில் முட்டாளாக இருப்பவன் இன்னொரு நேரத்தி மகா அறிவாளியாக இருக்கிறான். இதுதான் மனிதன். நா அதை அறிந்து வைத்துக்கொண்டு இருக்கிறேன். அது என் பலம். எல்லாவற்றையும்விட உன்னை அறிவதுதா அறிவின் உச்சம் என்பதை நான் திருவண்ணாமலையி தான் தெரிந்துகொண்டேன்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் நான் தன்ன தனியாக திருவண்ணாமலைக்குச் சென்றேன். எனக்கு திருவண்ணாமலைக்குச் சென்று அண்ணாமலையாரை தரிசிக்கவேண்டுமென்றோ, ரமணாசிரமம் போகவேண் மென்றோ திட்டமில்லை. நான் எதையும் திட்டமிட் செய்கிற ஆளில்லை. அந்த நேரதில் மனசில் என்ன தோன்றுகிறதோ அதைச் செய்கிற ஆள். அதனால் நல்லது கெட்டது எல்லாம் நடக்கும். எது நடந்தாலும், நீ தா அதற்குப் பொறுப்பு என்று நான் எனக்குச் சொல்லி கொள்வேன்.

பொறுப்பு ஏற்றுக்கொள்ளாதவன் பதர். முட்டாள். நான் அவனை மனிதப்பிறவியாகவே கருதமாட்டேன். என் அப்பா, எதற்கும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளமாட்டார்.



அதாவது நல்லது நடந்தால் தன்னால்தான் நடந்தது என்று கர்வப்பட்டுக் கொள்வார். தன் அறிவுமீது, திறமை மீது நம்பிக்கை வைத்துக்கொள்வார். கெட்டது-தப்பு நடந்தால் இன்னொருவர் மீது கூசாமல் தூக்கிப்போட்டு விடுவார். ஆள்கூட பார்க்கமாட்டார். பல நேரங்களில் அம்மா மாட்டிக் கொள்ளும்; சில நேரம் அண்ணன்; அப்புறம் நான்கூட மாட்டிக்கொண்டு இருக்கிறேன். பழியை தூக்கி போட அவர்க்கு இன்னொரு ஆள்வேண்டும். அவ்வளவு தான்.

நான் மாட்டிக்கொண்டது, எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அது ஒரு மாலைப்பொழுது. மழை லேசாகத் தூறியபடி இருந்தது. சிநேகிதர்களோடு சினிமாவிற்குப் போவதை அம்மாவிடம் சொல்லிவிட்டு போக ஓடி வந்தேன். அப்பா வாசல்படியைத்தாண்டி வெளியில் வந்தார். சாதாரணமாக அப்பா மாலைப்பொழுதில் வீட்டில் இருக்கமாட்டார். எனக்கு அப்பாவைப் பார்த்தும், எமனை நேர்க்கு நேராகப் பார்ப்பதுபோல இருந்தது. எனவே பயந்து, நின்றுவிட்டேன். அவர் என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு வேகமாக வெளியில் சென்றார். பெற்ற அப்பாவைப் பற்றி இப்படி எல்லாம் சொல்லக் கூடாது என்பது எனக்குத் தெரியும். ஆனால் உண்மை என்றால் அதைச்சொல்ல வேண்டும். உண்மையின் முன்னால் தாய், தந்தை என்ற பேதமெல்லாம் கிடையாது. உண்மை என்பது மட்டுந்தான் உண்டு. அதற்கு அப்பால் எதுவும் கிடையாது.

நான் அப்பாவை அன்று உயிரோடு பார்த்ததுதான். அப்புறம் பிணமாகப் பார்த்தேன். அவர்க்கு அது சாகக் கூடிய வயதில்லை. ஐம்பத்தெழுவயது. நோய்நொடி என்று படுத்ததில்லை. எப்போதும் நிமிர்ந்து நடப்பார்.

சபதமாகப் பேசுவார். குரலில் அதிகாரம் எதிரொலிக்கும். எதற்கும் பயப்படாத ஆள். ஆனால், எனக்கு மட்டும் பயந்தார். யாருக்கும் பயப்படாத ஆளையே நான் கதி கலங்கடித்துக்கொண்டு இருந்தேன். அதுதான் விசித்திரம்.

பிரகலாதன், இரணியனை பயமுறுத்திக்கொண்டு இருந்தது போலதான், நானும், என் அப்பாவை பயமுறுத்திக்கொண்டு இருந்தேன். ஆனால் ஒரு வித்தியாசம். பிரகலாதன், பெற்ற தந்தையிடம் சவால் விட்டுக்கொண்டு இருந்தான். நான் என் தந்தையின் எதிரில்கூட வருவதில்லை. அவர் உள்ளே இருந்தால், நான் வெளியில் இருப்பேன்; அவர் வெளியில் இருந்தால் நான் உள்ளே இருப்பேன். இப்படியான ஒரு வாழ்க்கை. எனக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பெரிய அத்தைதான், "நீ உன் தாத்தா மாதிரி இருக்கற. அதான் அப்பனுக்குப் பிடிக்கல" என்று சொன்னது.

தாத்தாவை எப்படி அப்பாவிற்குப் பிடிக்காமல் போனது; அதனால் ஏன் என்னை வெறுக்கிறார் என்று நான் யோசித்துப் பார்த்தேன். யோசிக்க யோசிக்க, யோசிப்பின் அர்த்தமின்மை தெரிந்தது. அது வெங்காயத்தை உறிக்கிற காரியந்தான். கண் எறிய, கண்களில் இருந்து கண்ணீர் உருண்டு திரண்டுவர வெங்காயத்தை உறித்துக்கொண்டு போனால் கடைசியில் மிஞ்சுவது என்ன?

அதுதான் வாழ்க்கை.

எஞ்சி இருப்பதென்ன?

கேள்விதான்.

உலகம் கேள்விகளால் ஆனது. கேள்விதான் சாசுவதம். கேள்விதான் ஒவ்வொருதலைமுறையிலும் ஒரே



கேட்கப்படுகிறது. அதற்காகப் பதில் ஒரே மாதிரி இல்லை. ஆளுக்கு ஆள்; இடத்திற்கு இடம். அவன் தெரிந்ததையும் தெரியாததையும் சார்ந்து இருக்கிறது. எந்த பதிலும் யார்க்கும் நிறைவு அளிப்பதில்லை.

சலவைக்கல் பதித்த ரமாணாசிரமத்தில் சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டு கண்களை மூடியபடி,

"பகவானே, நான் யார்?
பகவானே நீ யார்?" என்று கேட்டேன்.

ரமணர் என்னிடம் ரகசியமாக, எனக்கு மட்டுமே கேட்கக்கூடிய குரலில்,

"நானும் நீயே
நீயும் நானே" என்றார்.

நான் கண்களைத் திறந்து பார்த்தேன். ஒரு பெருங்கூட்டம், எனக்குப் பின்னால் உட்கார்ந்து பகவானை தரிசிக்க ரகசியமாக பிராத்தனை செய்து கொண்டு இருந்தது. அவர்களின் பிராத்தனை எனக்கு நன்றாகக் கேட்டது. என்னால் உட்கார்ந்து இருக்க முடியவில்லை. அவசர அவசரமாக எழுந்து வெளியில் வந்தேன்.

ரகசியமாகக் கேட்டதை, நான் ரகசியமாக வைத்துக் கொள்கிற ஆள். ரகசியம் என்றால் எனக்கு அது ரகசியந்தான். எதற்காகவும் வெளியில் சொல்லமாட்டேன். சின்னவயதில் இருந்து என் பழக்கம்.

ரமணாசிரமத்தில்தான் நான் ஞானம் பெற்றேன். ஞானம் என்பது ஏதோ பெரிய விஷயமாகத் தோன்றும் எனக்கு எதுவும் பெரியது; சிறியது கிடையாது. எல்லாம்

அதன் அதன் அளவில் முக்கியம்; அதுபோலவே முக்கிய[ம்] இல்லை. அப்பா, உயிரோடு இருந்தவரையில் என்னை பார்த்து பயப்படாதவர்கள் எல்லாம் - அவர்போன பிற[கு] பயந்தார்கள். அப்பாவை அடித்துவிட்டான் என்று நா[ன்] போகும்போது சொல்லிக்கொண்டார்கள்.

அடித்துவிட்டேன் என்பது சாக அடித்துவிட்டே[ன்] என்பது. என் ராசி அவர்க்கு சாவை கொண்டுவந்து விட்ட[து] என்று தெரிந்து கொண்டேன். எனக்கு ராசி, ஜோதிட[ம்] மேலெல்லாம் நம்பிக்கைக் கிடையாது. நான் என் அப்ப[ா] இல்லை. தாத்தா கிடையாது. நான் தனியாள். யாரோ[டு] என்னைச் சேர்த்தாலும் நான் சேரமாட்டேன். அதுகூட சரியில்லை. என்னை யாரோடும் எதனோடும் சேர்க்க முடியாது. நான் இன்னொருவர் இல்லை. மற்றவர் வழியில் போகிறவன் இல்லை. யாரும் போகாத - போகத்துணியாத பாதையில் தைரியமாக - எத்தனை இடர் வந்தாலும் தயங்காமல் முன்னெ காலடி எடுத்து வைத்துச் செல்கிறேன். என் காலடிச்சுவடு புத்தம் புதியது. இன்னொருவர் தடம் பதிக்காதது.

நான் அதை திருவண்ணாமலையில் தான் பெற்றேன். அதை நான் தெரிந்துகொண்டேன் என்பதை நானே செய்கிறபோது, திருவண்ணாமலைக்குச் சிறப்பு வருகிறது. திருவண்ணாமலைக்கு அக்னி சிறப்பு என்றால் சிதம்பரத்திற்கு கூத்தாட்டம் சிறப்பு.

ஒரு நேரத்தில் ஒன்று; படிப்படியாக மேலே ஏறுவது கீழே இறங்குவது என்பதெல்லாம் என்னிடம் கிடையாது. நான் குறுக்கு வெட்டி பாய்கிற ஆள். அதனால்தான் நான் தனியாள். யாரோடும் என்னை ஒப்பிட முடியாது என்கிறேன். அது அகம்பாவம், ஆணவம் இல்லை. அறிந்ததைப் புரிந்து சொல்வது. வாழ்க்கை என்பது அதுதான்.



திருவண்ணாமலையில் ஏழு நாட்கள் சுற்றி வந்தேன். நான் திருவண்ணாமலைக்குப் புதிது என்பது போல திருவண்ணாமலையும் எனக்குப் புதிதாக இருந்தது. ஆனால் திருவண்ணாமலையில் எரியும் தணலை கண்டு கொண்டேன். அது அக்னி ஸ்தலம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நெருப்பு எரிந்துகொண்டே இருக்கிறது. எரிய எரிய தணல் நாலாபக்கமும் வீசுகிறது. அணையா நெருப்பின் பெருவீச்சு என்னை ஆட்கொண்டுவிட்டது.

திருவண்ணாமலையே என் இருப்பிடம் என்று நினைத்துக்கொண்டேன். கிரிவலம் இரண்டு முறை வந்தேன். நடக்க நடக்க எனக்கு உற்சாக வந்துவிட்டது. மலைக்கு மேலே மூன்று முறை பறந்தேன். நடப்பது ஒருவிதமான ஆனந்தம் என்றால் பறப்பது இன்னொரு விதமான ஆனந்தம். ஆனந்தம் என்பது ஒன்றுதான் - எல்லாவிதமான ஆனந்தமும் ஒன்றில்லை. அதை நான் திருவண்ணாமலையில்தான் அறிந்தேன். அறிந்ததை அறிந்த விதமாகச் சொல்கிறேன்.

அது எனக்கு ரமணர் கொடுத்ததுதான். நீ யார் என மூன்றாவது நாள் கேட்டார். நான் அப்பொழுது மலை மேலிருந்து கீழே இறங்கிக்கொண்டிருந்தேன். இரண்டு நாட்களுக்கு முன்னால் மலையேறியவன். மலை யேறுவதில் எனக்குச் சிரமமே இல்லை.

எனக்கு எதிலும் சிரமம், கஷ்டம் கிடையாது. எனக்கு எதில் ஈடுபாடு இருக்கிறதோ அது எனக்கு வசப்பட்டுவிடும். நானும் அதுவும் ஒன்றாகிவிடுவோம். அப்படி ஆகும்போதெல்லாம் இரண்டும் ஒன்றாகிவிடப் போகிறது என்று நினைத்துக்கொள்வேன். அதுவும் ஆனந்தமாக இருக்கும். நான் உல்லாசபுருஷன். உல்லாச

புருஷன் ஒரு கெட்டவார்த்தையாகிவிட்டது. உண்மையில் அது அப்படி இல்லை. உல்லாச புருஷன் ஊதாரி இல்லை காமுகன் கிடையாது. கலவியில் அதிகமான நாட்டம் கொண்டவன் இல்லை. உல்லாச புருஷன் நல்ல ஆத்மா எல்லோரும் இன்புற்று இருக்க நினைக்கிறவன் அவனுக்குத்தான் என்றோ பிறர் என்றோ ஆனென்றோ பெண்ணென்றோ பேதம் கிடையாது. அவன் எப்போதும் எல்லா இடத்திலும் சுபித்து இருக்ககூடியவன்.

உல்லாசபுருஷன் இருக்கக்கூடிய இடம் சந்தோஷமான இடம். அங்கே சிரிப்பும் களிப்பும் பொங்கிப் பிரவாகித்துக்கொண்டே இருக்கும். சந்தோஷம் கொடுக்கும் எதுவும் கெட்டதில்லை. சங்கீதம், சாப்பாடு, கலவி எல்லாவற்றுக்கும் அங்கே இடம் உண்டு. எதுவும் விலக்கப்பட்டது இல்லை. எல்லாம் எல்லோர்க்கும் பொது. யார் எவர்க்கும் மேலானவர் இல்லை; அதுபோல யாருக்கும் யாரும் கீழானவர் இல்லை. கொடுக்கிறவர் பெறுகிறவர் என்ற பேதமெல்லாம் கிடையாது கொடுப்பது பெருமை என்பதுபோல பெறுவதும் பெருமை. அதனால் பெண்ணுக்குப் பெருமை; ஆணுக்கு ஆனந்தம். ஒன்றும் ஒன்றும் சேர்ந்தால்தான் இரண்டாகும். அது தெரிந்தது, நான் ஆசிரமத்திற்குள் போகவில்லை. கோவிலுக்குச் செல்லவில்லை.

ஒரு சிநேகிதி வீட்டில் மூன்றுநாட்கள் இருந்தேன். அவள் யார், எந்த ஊர் எதுவும் எனக்குத் தெரியாது. நான் கேட்கவில்லை; அவளும் சொல்லவில்லை. நான் எதையும் கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்ள மாட்டேன். கேள்வி கேட்பது; தெரிந்து கொள்வது என்பதில் எனக்கு விருப்பமே கிடையாது. அதனால் தான் யாரையும் கேள்வி கேட்கமாட்டேன். அவர்களாகச் சொன்னால் சொல்லாதே



என்று தடுக்கமாட்டேன். சொல்வதை காதுகொடுத்து கவனமாக கேட்பேன். நான் கேட்பதே அவர்களைச் சொல்ல வைக்கும். ஒவ்வொருவரிடமும் சொல்ல மகிழ்ச்சிகரமானது துக்கக்கரமானது - என்று எத்தனை இருக்கிறது என்று அவர்கள் சொல்கிறபோது நினைத்துக் கொள்வேன். அதில் மகிழ்ச்சிகரமான நிகழ்வுகளைவிட, துயரமானது தான் அதிகம் என்று முதலில் தோன்றியது. அப்புறம், நாட்கள் செல்ல மனிதர்கள் சொன்னதை எல்லாம் கேட்டுக் கேட்டு, சந்தோஷத்தை சொல்லத் தெரிய வில்லை; ஆனந்தத்தை அனுபவிக்கத் தெரியவில்லை. துக்கம், துயரம், கஷ்டம், சிரமம் என்பதைத்தான் வாழ்க்கை என்பது நினைத்துக்கொண்டு புலம்பி தீர்க்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

தெரிந்து கொள்வதும், புரிந்து கொள்வதும் தான் நான். அதுதான் என்னை நானாக வைத்து இருக்கிறது. என் துயரத்தைச் சுட்டு எரிந்து, என்னை ஜீவிக்க வைத்து இருக்கிறது.

நான், என் சொந்தக் கதையைச் சொல்கிற ஆளில்லை என்பது மாதிரி இன்னொருவன், இன்னொருத்தி சொல்கிற தையும் கேட்டுக் கொண்டு இருக்கிற ஆளில்லை. நான் கேட்பதும் உண்டு; கேட்காமல் இருப்பதும் உண்டு. அதனால் தான் என்னை எதிலும் சேர்க்க முடியாது. யார் பக்கமாகவும் நான் இருக்கமாட்டேன்.

என் வழி தனிவழி.

இன்னொருவன் சென்ற வழியில், அது நல்ல வழியாக இருந்தால்கூட போகமாட்டேன்.

திருவண்ணாமலையில் சிநேகிதிக்கு என்னை ரொம்பப் பிடித்துப்போய்விட்டது. என்னை ஆண்களை

விட பெண்களுக்கு ரொம்பப் பிடிக்கும், என்பதுபே அவர்களையும் எனக்குப் பிடிக்கும். அதைச் சொல்வதி எனக்கு கூச்சம் கிடையாது. எது உண்மையோ அ தைரியமாக வெளியில் சொல்லவேண்டும். தைரி என்றால் கொலை செய்வது; கொள்ளை அடிப்ப இல்லை. திருடுவது, வஞ்சகம், சூழ்ச்சி இல்லை நெஞ்சுக்கு அநீதி இழைப்பது இல்லை. நிஜமாகவே நெஞ்சுக்கு நீதி.

என் சிநேகிதி, லட்சுமி ஒரு பரியாரியை அழை வந்து முடிவெட்ட வைத்தாள். சின்னபையன். பத் மாசத்து முடியை அவசர அவசரமாக வெட்டி தள்ளினா ஏதோ காட்டை அழித்து, மரத்தின் கிளைகளை வெட் சாய்ப்பது மாதிரி, என் தலைமுடியை வெட்டி தள்ளினா தாடியை மழித்துவிட்டு, மீசையை சரி பண்ணினான்.

“மீசையை எடுத்துடு” என்றாள் லட்சுமி.

“சார்க்கு, மீசை ரொம்ப அழகு அம்மா” என்றப என் மீசையை ஒழுங்குப்படுத்தினான்.

லட்சுமி என் முகத்தை ஒரு பார்வை பார்த்துவிட் தலையை அசைத்துக்கொண்டு சென்றாள்.

அழகு முத்து கண்ணாடியை என் முகத்திற் நேராகப் பிடித்தான். நானே, என் முகத்தை ஒ வருஷத்திற்குப் பிறகு பார்க்கிறேன். தாத்தாவின் முகத்தை கண்ணாடியில் பார்த்தது போலவே இருந்தது. நான்தா தாத்தா, தியாகராஜ முதலியார்.

இடது கையால் மீசையைத் திருகிவிட்டு கொண்டேன்.



“ரவுடி மாதிரி. என்ன மீசை. வெட்டு” என்று லட்சுமி கடுகடுத்து உத்தரவு போட்டாள்.

“சரி அம்மா” என்று அழகு முத்து என் மீசையை நறுக்கினான். அவன் கலைஞன். முடிதிருத்தும் கலைஞன். எந்த மூஞ்சிக்கு எந்த மீசை சரியாக இருக்கும் என்பதைத் தெரிந்தவன்.

பெண்ணுக்கும் மீசைக்கும் என்ன சம்பந்தம். ஒரு சம்பந்தமும் கிடையாது. ஆனால் பெண்கள் மீசை விரும்பிகள் இல்லை. ஆண் மீசையின் முதல் விரோதி பெண்கள்தான். மூஞ்சியில் மயிர் குத்துவது பொறுக்க முடியாதபடி அறுவறுப்பு கொடுக்கிறது. அதுதான் காரணம். நான் கேட்டுத் தெரிந்தது இல்லை. நான் எதையும் யாரிடமும் கேட்டுத் தெரிந்துகொள்வது கிடையாது. நானாக யூகித்து தெரிந்து கொள்வேன். என் யூகம் தவறாகப் போனது இல்லை.

லட்சுமி என்னைத்தேய்த்து வென்னீர் வைத்து குளிப்பாட்டிவிட்டாள். குளிப்பது ஓர் ஆனந்தம். ஆற்றில் குளிப்பது பேரானந்தம் என்றால் வென்னீரில் நீராடுவது ஆனந்தம். அதுவும் மனத்திற்கு இனியவள், உட்கார வைத்து தலையில் வென்னீர் ஊற்றி உடம்பு தேய்த்து விடுவது மகா ஆனந்தம். அது எப்பொழுதும் நிகழ்வது இல்லை என்பதால் சிறப்படைகிறது.

நீராடி எழுந்ததும் உடுத்துக்கொள்ள மயில் கண் வேட்டி கொண்டுவந்து கொடுத்தாள். இரண்டு முறை உதறி உதறி பார்த்தேன். தாத்தா சிவப்புக்கரை போட்ட மயில் கண் வேட்டிதான் கட்டுவார் என்று அத்தை சொன்னது நினைவிற்கு வந்தது.

குடும்பத்திற்கும் அறிவுக்கும் என்ன சம்பந்தம். எதுவும் தானாக வருவதில்லை. தாய் தகப்பன் புத்திசாலி பிள்ளைகளுக்கு வருகிறது. கூடுதலாக வருவது தாத்தா பாட்டிதான். அதுதான் குடும்பத்தின் சொத்து. செல்வம் செல்வம் என்றால் நிலம், வீடு, பணம், நகை இல்லை நான் சொல்வது நிஜமான செல்வம். ஒரு குடும்பம் என்பது எதுவே அதுவே நான் சொல்வது. ஒரு குடும்பத்தின் குணம் தெரியவில்லை என்றால் அது இல்லை என்று ஆகிவிடாது இருக்கிறது; தெரியாமல் இருக்கிறது. அதுதான் முக்கியம். நான் தாத்தாவை கொண்டிருக்கிறேன் என்பது சம்பிரதாயமாகச் சொல்லிவிடலாம். உண்மையில் தாத்தா என்னைக் கொண்டிருந்தார். அதுதான் அவர்க்குப் பெருமை. நான் அதை உணர்ந்து கொண்டிருக்கிறேன். எனக்குப் பெருமை.

அப்பாவிற்கு அறிவைவிட ஜோதிடத்தில் தான் நம்பிக்கை அதிகம். அது தாத்தாவின் அப்பா குணம். அதை அவர் பிடித்துக்கொண்டு இருந்தார். ஒவ்வொரு குடும்பத்திலும், ஐந்து தலைமுறை, ஆறு தலைமுறை சிந்தனைகுணம் பாய்ந்து ஓடிகொண்டே இருக்கிறது. ஆண் பெண் என்ற வித்தியாசம், பாகுபாடு எல்லாம் கிடையாது. தெரிந்தவர்கள் புரிந்து கொள்கிறார்கள். தெரியாதவர்கள் தெரியாமலே வாழ்ந்து மாண்டுபோகிறார்கள்.

குடும்பத்தில் இருக்கிற ஒவ்வொரு ஆணுக்கும் சரித்திரம் உண்டு. ராஜா, ராணிக்குச் சரித்திரம் இருப்பது போல. உண்மையில் ராஜா, ராணி சரித்திரம் பொய் சரித்திரம். வஞ்சகம், சூழ்ச்சி கபடத்தின் சரித்திரம். கொலை, கொள்ளை சரித்திரம். அது படிக்கக்கூடிய தில்லை. தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், அதிலிருந்து தெரிந்துகொள்ள எதுவுமே இல்லை. நான்



சொல்லவில்லை. சொல்லப்பட்டிருக்கும் சரித்திரம் மறுபடியும் மறுபடியும் அதையே சொல்லிக்கொண்டு இருக்கிறது. சுவாரசியமற்ற, புத்துணர்ச்சி இல்லாத பொய்ச் சரித்திரம், சரித்திரமாக இருக்கிறது. அதற்கு அடிப்படைக் காரணம், பொய்மீது மனிதர்களுக்கு இருக்கும் கவர்ச்சிதான். பொய்யைப் பேசுவதிலும் கேட்பதிலும் காலம் காலமாக மனிதர்களுக்கு ஆசை இருக்கிறது. அதைக் கேட்பது போலவே, பேசுவதிலும் பேராசை இருக்கிறது. அதில் பெண், ஆண் என்ற பேதம் எல்லாம் கிடையாது. பெரியவன் சின்னவன் என்ற வித்தியாசம் கிடையாது. ஒவ்வொரு மனுஷியும், மனிதனும் தன்னால் முடிந்த வரையில் பொய்ச்சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த உலகம் பொய்யில் அமிழ்ந்து கொண்டு இருக்கிறது. அதனால்தான் வள்ளுவர் தன் நெஞ்சறிவது பொய்யற்க என்று சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவசியம், காரண காரியம் இல்லாமல் எதுவும் இல்லை.

எதற்கு எப்போது தேவையோ - அவசியமோ அப்பொழுது அது சொல்லப்படும். உலகம் பொய்யால் நிறைந்துபோனது - மாசை கட்டுப்படுத்த பொய்யுரைக் காதே என்றார். ஆனால் பொய் பேசுவது இயல்பு. சௌகரியமானது. அதனால்தான் ஒவ்வொருவனும் பொய் பேசிக்கொண்டே மெய் பேசுவென்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். நான், யாரையும் குற்றம் குறை சொல்ல அதைச் சொல்லவில்லை. என் நோக்கம் குறை காண்பதில்லை. குற்றம் காட்டுவது இல்லை. என்ன இருக்கிறதோ அதை அப்படியே சொல்வது.

எந்த இடத்தில், எதைச் சொன்னால் கலவரம் வருமோ. யாருக்கும் பிடிக்காமல் போகுமோ அதை அந்த

இடத்தில் சொல்லேன். அதாவது மெய் பேசுவேன் குடும்பத்தில், சிநேகிதர்கள் சக ஊழியர்கள் - யார்க்கும் அது பிடிக்காது. ஏனெனில் பொய் ஆட்சி செய்யும் இடத்தில் நான் மெய்யைப்பிரகடனப்படுத்துவேன். எனக்கு பொய் தெரியும். பேசவும் கற்றுவைத்துக்கொண்டு இருக்கிறேன்.

நான் முட்டாளை அறிவாளி என்ற தான் அழைப்பேன். அறிவாளியை மேதை என்பேன் ஆரம்பத்தில் அது மகிழ்ச்சி கொடுக்கும். ஆனால் நாள் ஆக ஆக என் பொய் தெரிந்துபோய் கோவித்துக்கொள்வார்கள் அதனால் என்னோடு பேசமாட்டார்கள். விரோதியா நினைத்துக்கொண்டு ஒதுங்கிப்போய் விடுவார்கள்.

சிநேகிதர்கள் விலகிப்போவதும்; புதி சிநேகிதர்கள் வந்து சேர்வதும் தொடர்ந்து நடைபெற்று கொண்டுதான் இருக்கிறது. சிநேகிதம் நிரந்தரமானது ஆனால் சிநேகிதர்கள், சிநேகிதிகள் நிரந்தரம் இல்லை ஏனெனில் மெய், உண்மைச் சுட ஆரம்பித்ததும் ஒதுங்கி போய் விடுவார்கள்.

பொய்தான் உலகத்தை ஆட்சி புரிகிறது என்றாலு எப்போதும் பொய்யே பேசிக்கொண்டு இருக்க முடியாத பொய்யின் இடையில் உண்மை தலைகாட் ஆரம்பித்ததும், பயந்து ஓடிபோய்விடுவார்கள். அப்புறம் நீங்கள்தான் விரோதி; பரம வைரி. எப்பொழுது உங்களைப் பற்றிப் பழி தூற்றிக்கொண்டும், வசைபாட கொண்டு இருப்பார்கள்.

நான் அறிந்ததில் இருந்து சொல்கிறேன. என் அனுபவம் என் அனுபவம் மட்டுமில்லை. அது எல்லோர்க்குமானது. ஒவ்வொருவர்க்கும் என்ன நேர்மோ அதுவே எனக்கு நேர்கிறது. அதை நான் சகிப்பது இல்லை பொறுத்துக்கொண்டு இருப்பதில்லை. பொறுமை நல்ல



பண்புதான் என்றாலும் பொயைப் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது. அதுதான் நான். என்னை அறிந்து கொண்டு இருப்பதால், நான் சொல்கிறேன்.

அறிவதும், அறிந்ததை அறிந்தவிதமாகச் சொல்வதும் எல்லோர்க்கும் எளிதல்ல. அதைச் சொன்னால் ரொம்ப பேர்களுக்குப் பிடிப்பதில்லை. யார்க்கு எதைச் சொன்னால் பிடிக்குமென்று பார்த்து பேசக்கூடிய ஆட்கள்தான் உலகத்தில் அதிகம். நான் அது இல்லை. எல்லோரும் செய்கிற காரியத்தை நான் செய்யமாட்டேன். எனக்கு எது சரியென்றுபடுகிறதோ அதைத்தான் சொல்வேன். சொல்வது மட்டுமல்ல அதையே செய்துவேன். அதனால் எனக்கு எல்லா இடத்திலும் கெட்ட பெயர்.

“தியாகுவா, அவன் வேணாம்.. எதை எங்க பேசறதுன்னு இங்கிதம் தெரியாத ஆள்” என்ற சொல்வார்கள்.

முதலில் நான் இல்லாதபோது - மறைவாக சொல்லிக்கொண்டு இருந்தவர்கள்,

“எதற்கு இப்படிபேசற. உலகமென்றால் நாலுந்தான் இருக்கும். அதற்கு நீயும், நானும் என்ன செய்றது” என்று முகில் வேந்தன் கேட்டான்.

“என்னோடு உன்னைச் சேர்த்துக்கொள்ளாத. நீயும் நானும் ஒன்றில்லை” என்று முகில் வேந்தனுக்கு பதில் சொன்னேன். அவன் முகம் சுண்டி போய்விட்டது. அவன் ரொம்ப நல்லவன். வயது நாற்பத்தெழு; நாற்பத்தெட்டு இருக்கும். இளம்பருவத்தில் பெரிய விளையாட்டு வீரன். ஐநூறு மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் தேசிய அளவில் முதலாவதாக வந்தான். அதனால் வேலை கிடைத்தது. கறுப்பன், ஆனால் சிவப்பான பெண் கிடைத்தாள்.

முகில் வேந்தனிடம் எனக்குப் பிடித்தது அவன் எளிமைதான். பார்த்தால் முரடன் போல இருப்பான். ஆனால் நிஜத்தில் எளிய மனிதன். அப்பாவி என்றும் சொல்லிவிடலாம்.

வாழ்க்கையின் விசித்திரம் அதுதான். தோற்றத்தை வைத்துக்கொண்டு எந்த முடிவும் எடுக்கக்கூடாது. அது மற்றவர்களுக்கு எப்படி பொருந்தினாலும், பொருந்தா விட்டாலும், எனக்கு சரியாக பொருந்தி போய்விடும்.

"ஐயோ, பாவம்" என்று என்னைப் பார்த்து சொல்ல வைக்கும். ஒல்லியாக, ஒடிசலாக நீண்ட மீசை வைத்துக்கொண்டு, கதர்மேல் சட்டை போட்டுக்கொண்டு பேண்ட் போட்டுக்கொண்டு இருப்பேன். ஆனால் நிஜத்தில் நான் அப்படி இல்லை. பேசினால் தலையை சீவி விடுவேன். குத்தி கிழித்துவிடுவேன். அதற்குப் பெரியஆள்; சின்னஆள் என்ற பேதமெல்லாம் கிடையாது. எதிரி, மாட்டினால் வீழ்த்திவிடுவேன். இரக்கம், மனிதாபி மானம் ஒன்றும் கிடையாது. அதெல்லாம் அடிப்படையில் இல்லாதது. சொல்லிக்கொடுக்கப்பட்டது. நான் அதையெல்லாம் வாழ்க்கையில் கைகொள்வதே கிடையாது.

என் வழிதான், சரி என்பது என் கொள்கை. சிலர் அதை வெளியில் சொல்வது இல்லை. நான் தைரியசாலி. அதனால் சொல்கிறேன். என் தைரியம் எனக்கு மட்டும் பலம் சேர்ப்பது இல்லை. என்னோடு இருப்பவர்கள், சிநேகிதர்கள், உறவினர்கள் - என்று பலர்க்கும் உதவக் கூடியது. வாழ்க்கை என்பது தனக்காக வாழ்வதில்லை. உன் அறிவு உன்னுடையதுதான் என்றாலும் அதனை நீ மட்டும் அநுபவிக்கக்கூடாது. அது வாய்க்காலில் பாய்ந்தோடும் தண்ணீர் போன்றது. புல், பூண்டு,நெல், விழல் - என்று



எல்லாவற்றுக்கும் உரியது. அது, இதற்கு மட்டுந்தான் என்று முரண்டுபிடிப்பது இல்லை. ஓடி ஒழிந்து கொள்வதில்லை.

ஒருநாள், முகில்வேந்தன் என்னைத்தேடிக்கொண்டு வந்தான். அலுவலகம் முடிகிறநேரம்.

"என்ன முகில்"

"சும்மாதான் சார்"

"பொய் சொல்லக்கூடாது"

அவன் சிரித்தபடி உட்கார்ந்தான்.

"சொல்லு"

"ஒரு விஷயம் பேசனும் சார்"

"பேசு"

அவன் என் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். தயக்கமுற்று குழம்பிப்போய் இருந்தான். அது நெடுநாள் குழப்பம். எனக்கு அது கொஞ்சம் தெரியும். அது அவன் சொல்ல; மற்றவர்கள் சொல்ல நான் அறிந்ததில்லை. எதுவும் எனக்கு இன்னொருவர் சொல்லவேண்டிய தில்லை. என்னைச் சுற்றி எது நடந்தாலும் எனக்கு அது தெரிந்துவிடும். எதையும் நான் தேடிக்கொண்டு போக மாட்டேன். ஆனால் எல்லாம் எனக்குது தெரிந்துவிடும். நான் சொல்வது என்னவோ என்னை பெரிசுபடுத்திக் கொள்ள சொல்வதுபோல தோன்றும். ஆனால் உண்மையில் அது இல்லை. நான் அறிந்ததை - அறிந்து கொண்டு இருப்பதை மட்டும் சொல்கிறேன்.

முகில்வேந்தன் மனைவி ஊர்மிளாதேவி மூன்றாண்டுகளுக்கு முன்னால் தொண்டையில் கேன்சர் வந்து செத்துப்போனாள். அது அவளுக்கு சாகிற வயது

இல்லை. சாவதறகு வயது கிடையாது. அவள் சாகிறபோது இருபத்தெழு; இருபத்தெட்டு வயது. இன்னும் பல ஆண்டுகள் உயிர்வாழக் கூடியவள். ஒரு பெண் குழந்தையை விட்டு விட்டு செத்துப்போனாள். குழந்தைக்கு ஐந்து வயது. அபர்ணாதேவி என்று பெயரிட்டு இருந்தாள். குழந்தை அம்மா வழி பாட்டி வீட்டில் வளர்ந்து கொண்டு இருந்தது. எனக்கு முகில் வேந்தனைப்பற்றி தெரியவேண்டிய அளவிற்குத் தெரியும்.

## 6

உலகம் பெரியது; மக்கள் தொகைப் பெருக்கத்தால் பிதுங்கி வழிகிறது என்றாலும் எல்லோரையும் பற்றி எல்லோர்க்கும் தெரியும். முகந்தான் தெரியாது. முகம் தெரியவேண்டிய அவசியம் இல்லை. மனிதன் என்பது முகமல்ல. பெண் என்றால் உடம்பு இல்லை. உடம்புக்குள் ஆத்மா இருக்கிறது. அன்பு செலுத்த இதயம் இருக்கிறது. பாசத்தைப் பொழிய மனசு இருக்கிறது. டாக்டர் சொல்வது போல இரத்தத்தை நரம்புக்கள் வழியாதள்ளிவிட சுருங்கி விரிவதுதான் இதயத்தின் வேலைஇல்லை. அறிந்ததில் எல்லாம் அறியப்படாமல் இருக்கும் இதயத்தின் பரிபூரண சக்தியைப்பற்றி தான் யோசித்துக் கொண்டே இருப்பேன். அது என்னை வியப்பில் ஆழ்த்தும்.



கடவுள் உண்டா இல்லையா என்பது கேள்வியே இல்லை?

நான் யார்?

தியாகராஜன் யார்?

அவன் தாத்தா தியாகராஜ முதலியார் யார்?

அப்புறம் சம்பந்தம் முதலியார் யார்?

அறிவால் அறிந்துகொள்ளவேண்டியது. என் தாத்தா தியாகராஜ முதலியார் பற்றி சொல்லப்பட்டு உள்ளதில் உள்ள மெய்யை, உறுதிபடுத்துவதுபோல பொயை உதறிவிட்டுக் கொண்டுவருகிறேன். பொய்யை ஒழிப்பது தான் எல்லாவற்றையும்விட கடினமான வேலை. ஏனெனில் நெருப்பு பஞ்சில் பற்றிக்கொள்வது மாதிரி - மனிதர்கள் மனத்தில் பொய் பற்றிக்கொண்டு விடுகிறது. மனிதர்களிடம் இருந்து பொய்யை ஒழிப்பது லேசுப்பட்ட காரியம் இல்லை. அது பொய்யின் வசீகரம் மட்டுமல்ல; அதை ஏற்பதில் உள்ள சந்தோஷமுந்தான்.

முகில்வேந்தன் என் முகத்தையே பார்த்தபடி இருந்தான். மெய்க்கும் பொய்க்கும் இடையில் தவித்துக் கொண்டிருந்தான். அவன் தவிப்புப் புரிந்தது.

"சொல்லு, முகில்" என்றேன்.

அவன் தனக்குத்தானே தலை அசைத்துக் கொண்டான். மனிதன் லட்சக்கணக்கான ஆண்டுகளாகப் பேசிக்கொண்டு இருக்கிறான் என்றாலும் எல்லா நேரத்திலும் சொல் வாயிலிருந்து வேகமாக ஒடி வருவதில்லை. காலம், நேரம், சொல்லப்பட இருக்கிற விஷயம், கேட்கப்போகிற ஆளின் மனோநிலை;

காட்டுகிற அக்கறை - என்று எத்தனையோ விஷயங்களைப் பொறுத்து இருக்கிறது. மனசில் இருக்கிற தடை விலகினால் தான் பேச்சு சரளமாக வெளியே வரும். எனக்கு அது தெரியும். எனக்கு மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் அதுதான். என்னையே நான் தெரிந்து கொண்டிருப்பது மாதிரி எதிராளிகளையும் தெரிந்து வைத்துக்கொண்டு இருக்கிறேன். அதுவே என்னை பேச வைக்கிறது என்பதுபோல மௌனமும் காக்க வைக்கிறது. பேச்சு ஒரு மொழியென்றால் மௌனம் இன்னொரு மொழி. பேசத்தெரிந்தது போல - மௌனமாக இருக்கவும் தெரிந்து இருக்கவேண்டும்.

கல்லூரியில் படிக்கும்போது பேராசிரியர் க.அருணாசலம் சொல்லுகச் சொல் பிறிதொரு சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து என்று சொன்னதை நான் நன்றாகப் பிடித்துக்கொண்டு விட்டேன். என் பேச்சுக்கு எல்லாம் அதுதான் காரணம். சொல் என்பது வாய்ச்சொல் இல்லை. அது அறிவின் சொல். உன் பேச்சு உன் அறிவின் வெளிப்பாடு. எங்கே எப்படி பேச வேண்டும் என்பது தெரியாவிட்டால், முட்டாளாகி விடுவாய். உன் சொல்லே உன்னை வீழ்த்திவிடும்.

நான் பேசுவதைப் பார்த்துவிட்டு, அத்தை, என்னை இறுக கட்டியணைத்துக்கொண்டு, "தாத்தா நாற்பது வயதில் பேசியதையெல்லாம் நீ ஒன்பது வயதே பேசுற. நீ யாருமில்ல. உன் தாத்தா" என்றது.

அது தாத்தாவின் பெருமை இல்லை. என் பெருமை. தாத்தாவை அத்தை என் வழியாக அடையாளம் காணுகிறது; எங்கள் குடும்பம் என் வழியாக பாரம்பரியத்தை ஸ்தாபிக்கிறது; ஊர் தாத்தா வழியாக அடையாளம் கண்டு கொள்கிறது.



நான் மயிலாடுதுறை சென்றபோது, ஞானசம்பந்தம், "தெரியுமா தியாகு, வேதநாயகம் பிள்ளை இங்கதான் தமிழ் முதல் நாவலை எழுதுனார். அதுதான் பிரதாப முதலியார் சரித்திரம். நிஜத்தில் அது ஞானாம்பிகை சரித்திரம். ஞானாம்பிகை என்பது அம்மாள் பெயர். நாம் சாயந்திரம் வேதநாயகம் பிள்ளை வசித்த வீட்டை, அவர் வேலை பார்த்த கச்சேரியைப் பார்த்துவிட்டு கோவிலுக்குப் போய் அம்பாளை தரிசிப்போம்" என்றார்.

"ஞானாம்பிகையை தரிசிப்போம்"

"நீ இப்படி சொல்வேன்னு தெரியும்"

சீர்காழி ஞானசம்பந்தம் மயிலாடுதுறையில், மகள் ஞானாம்பிகை வீட்டில் இருந்தார்.

"எப்படி ஜீவனம்" என்று ஒருமுறை கேட்டேன்.

"சுக ஜீவனம்" என்றார்.

என் அகம்பாவம் ஒழிந்தது. நான் பலரையும் தலையில் கொட்டி இருக்கிறேன். அதில் மெத்தப் படித்தவர்கள்; பேராசிரியர்கள், நூலாசிரியர்கள் எல்லாம் உண்டு; சில இடத்தில் நறுக்கென்று கொட்டுவாங்கி இருக்கிறேன். என்னைக் கொட்டியவர்கள் சாதாரண மனுஷிகள் போல இருக்கும் அசாதாரணமான மனுஷிகள், முதலில் அத்தை, அம்மா, அப்புறம் தனியாக பெயர் சொல்ல முடியாதா மனுஷிகள்; ஒவ்வொரு மனுஷியும் ஒருவிதம். நாம்தான் அதை அறிந்துகொள்ள வேண்டும். அறிந்து கொண்டால் உனக்குப் பெருமை. சிறப்பு. காலம் காலமாக சொல்லிக்கொண்டிருக்கலாம். அறியாவிட்டால் அவர்களுக்கு சிறுமை இல்லை. சிறுமை என்பது அவர்களை அண்டமுடியாது.

நானும், சம்பந்தமும் தரங்கம்பாடிக்குச் சென்று இருந்தோம். எனக்கு ஊர் சுற்றுவதில் ஆசை உண்டு. ஆனால் நான் நாடோடி இல்லை. அவசியம் என்று மனது சொன்னால் ஊர்ச்சுற்ற கிளம்பிவிடுவேன்.

எல்லா ஊரும் எனக்கு ஒன்றல்ல. ஒவ்வொரு ஊரும் ஒவ்வொருவிதம். தனித்தன்மையும் வித்தியாசமும் கொண்டது. ஆனால் முதல்பார்வைக்குத் தெரியாது. கவனத்தால் வித்தியாசம் தெரியும். நான் கவனித்துப் பார்க்கிறவன். எனக்கு ஒற்றுமையைவிட வேறுபாடுதான் அதிகமாகத் தெரியும். அதை அறிய அறிவுவேண்டும். ஒன்றாக இருப்பது போல தோன்றும் எதுவும் ஒன்றல்ல. ஒவ்வொன்றும் அதன் அதன் அளவில் வித்தியாசப்பட்டு இருக்கிறது.

தரங்கம்பாடி கடலும், ஊரும் வித்தியாசப்பட்டு இருப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தேன். சீகன் பால்கு கால் பதித்த இடங்கள் எனக்குத் தெரிந்தன. எது தெரியவேண்டுமென்று நினைத்தாலும் எனக்குத் தெரிந்துவிடும். அதுதான் நான்.

சீகன்பால்கு தரங்கம்பாடி மணலில் தமிழ் எழுதி எழுதி பார்க்கிறார். போர்த்துக்கீசியமொழி வழியாக அளகப்பன் சொல்லிக்கொடுத்ததை மறுபடியும் மறுபடியும் தனக்குத்தானே சொல்லி பார்த்துக் கொள்கிறார். கொஞ்சம் படிக்கவும், எழுதவும் வந்ததும், ஓலைச்சுவடிகள் தேடிப்பிடித்துவந்து படிக்க ஆரம்பிக்கிறார்.

அவர்க்கு ஔவையாரின் கொன்றைவேந்தன், உலகநீதி படிக்கக் கிடைக்கிறது. பகலில் கடற்கரையிலும் இரவில் தன் விட்டிலும் உட்கார்ந்துகொண்டு



சிரத்தையாகப் படிக்கிறார். படிக்கப் படிக்க ஆசை பற்றிக் கொள்கிறது. படிப்பு என்பது நெருப்பு. பற்றிக் கொண்டால் அணைக்க முடியாது. கொழுந்திட்டு எரிந்துகொண்டே இருக்கும்.

"ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்" என்று ஔவையாரின் உலகநீதியைச் சொன்னேன். எப்பொழுதோ படித்தது. திடீரென்று நினைவிற்கு வந்தது.

அதுதான் கற்பது; படிப்பு என்பது ஒருமுறை மனத்தில் ஏற்றிவிட்டால் உடம்பை சுட்டெரிக்கும் வரையில் இருக்கும். கேடில் விழிச்செல்வம். கல்வியை விட உரிய செல்வம் ஏதுமில்லை.

தரங்கம்பாடிக்கு ஜெர்மனியில் இருந்து கிறிஸ்துவ பிரசாரத்திற்காக வந்த சீகன்பால்கு அதை நன்றாக கைப்பற்றி கொண்டார். அவர்க்குத் தமிழ்பித்து பிடித்து விட்டது. தேடித்தேடி சுவடிகளைக் கண்டு பிடித்து படிக்க ஆரம்பித்தார். தமிழ்ப் படிக்கப் படிக்க தன் மொழியில் மொழிபெயர்க்க ஆவல் வந்துவிட்டது. அதுதான் கல்வியின் சிறப்பு. நூலின் வலிமை. அது பேசும். மனத்தைக் குடையும்.

நான் சீகன்பால்கு பற்றிச் சொல்லச் சொல்ல சம்பந்தம் கேட்டுக்கொண்டிருந்தார். கேட்க ஆளில்லாத போது நான் பேசுகிறேன். என் பேச்சை கேட்க ஓர் ஆள் எதிரே குந்தியிருக்கையில் உற்சாகம் கூடிவிட்டது.

சீகன்பால்கு ஜெர்மனியில் இருந்து தமிழ் எழுத்துக்கள் கொண்டு வந்தது, பொறையாற்றில் காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்தியது; மை உற்பத்தி செய்து புத்தகம் அச்சிட்டது பற்றி எல்லாம் சொன்னேன். ...னாக

கடலில் இருந்து காற்று வேகமாக வீசியது. கண்களுக்கு முன்னால் கடலும் வானும் நீலமாக காட்சியளித்தன. எனக்கு எப்போதும் கடல் பிடிக்கும். அலைகளோடு பேசிக்கொண்டு சரமணலில் கால் பதிய பதிய நடந்து போவேன்.

கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலம் என்றழைக்கப்பட்டது. நெய்தல் நிலத்து மணலில் மீன் காய்ந்து கருவாடாகும்.

"சீகன்பால்கு, கொன்றைவேந்தன், உலகநீதியை ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்து இருக்கிறார். இந்திய மொழியில் இருந்து ஐரோப்பிய மொழி ஒன்றுக்கு முதன்முதலாக ஔவையாரின் உலகநீதிதான்."

"ரொம்ப வேலை தரங்கம்பாடியில் நடந்து இருக்குது"

"1712 ஆம் ஆண்டில் தரங்கம்பாடி மலபார் போர்த்துக்கீஸ் அச்சுக்கூடத்தில் ஒரு நூல் அச்சடித்து இருக்கிறார்."

"அதை இப்ப வெளியிட்டு இருக்கிறார்கள். தமிழ்தான் தரங்கம்பாடியிலே இருக்கிற குருமார்கள், தமிழ் சாதியினர் எல்லார்க்கும் எழுதின திருபம் என்று இருக்கிறது" என்றார்.

"தரங்கம்பாடிக்கு காந்தி வந்து இருக்கிறார்."

"1915 ஆம் ஆண்டு தில்லையாடி வள்ளியம்மை மூதாதையர்களைப் பார்த்து ஆசிபெற வந்த காந்திக்கு பொறையார் மக்கள் திரண்டு தரங்கம்பாடியில் ஒரு பெரிய வரவேற்பு கொடுத்தார்கள்" என்றார்.



நான் பேசுகிறவன் என்றாலும், கேட்கிறவன். அது மற்றவர்களுக்குத் தெரியவில்லை. நான் பேசுவது தான் தெரிகிறது. பேசுவதில் உள்ள சுகம், ஆழம் தெரிவதில்லை. சப்தத்தை மட்டும் பிடித்து வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு நான் பொறுப்புக்கிடையாது. என் பேச்சு, நான் தான். பேசாமல் கேட்கிறதும் நான் தான். பேசுகின்றவனை தெரிந்து கொள்கிறவர்கள், பேசாமல் இருக்கும் என்னைத் தெரிந்து கொள்வதில்லை. அதுதான் பிரச்சினை. இன்னும் சொல்லப்போனால் யாரும், யாரையும் தெரிந்துகொள்வதில்லை.

ஒவ்வொரு மனிதனும் தன்னந்தனியாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். மா மரம் பூத்து காய்த்து பழம் கொடுப்பது மாதிரி; தாமரைக் குளத்தில் சேற்றில் சேறுபடாமல் பூப்பது மாதிரி நான் இருக்கிறேன். அதுதான் எனக்கு மற்றவர்களுக்கு உள்ள வித்தியாசம்.

மயிலாடுதுறையில் எனக்கு ஞானசம்பந்தம் உற்ற நண்பராகிவிட்டார். உற்ற நண்பர் என்றால் உண்மையிலேயே உற்ற நண்பர்தான். சில விஷயங்கள் விளக்கக் கூடாது. புரிந்துகொள்ளப்பட வேண்டும். நான் கொடுத்து வைத்தவன். என்னை நிறையபேர்கள் புரிந்து கொள்கிறார்கள். நான் அவர்களைப் புரிந்து கொண்டதை விட, என்னை அவர்கள் புரிந்துகொண்டதுதான் அதிகம். நான் எளிமையானவன் போல இருப்பேன்; ஆனால் எளிமையானவன் இல்லை. நல்லவன் போல காட்சி தருவேன்; இருந்தாலும் நல்லவன் கிடையாது. ஆனால் அயோக்கியன்; வஞ்சகன், சூழ்ச்சிக்காரன் பொறாமைப் பிடித்தவன் என்று என்னைப் பற்றிசொல்லமுடியாது.

எனக்குப் பெண்களைப் பிடிக்கும் என்று சொல்வதைவிட, நான் அவர்களுக்குப் பிடித்தமானவனாக

ந்தன. அவர்கள் என்னை மடியில் படுக்கப்போட்டு கொண்டு, நெஞ்சியில் சாய்த்துக்கொண்டு முத்தமிட்டு மகிழ்ந்து போகிறார்கள். அதில் எனக்குச் சந்தோஷம் என்பதைவிட, அவர்களின் சந்தோஷம் அவர்களுக்கே தெரிந்தது. அதுபற்றி பேசக்கூடாது; எழுதக்கூடாது. அற்பர்கள்தான் சிநேதிகளின் சிரீங்காரம் பற்றி வெளியில் சொல்லிச் சொல்லி நாறிபோவார்கள்.

எனக்குச் சிநேகிதன் கூட்டம் பெருக முதல் காரணம், நான் ஒருத்தி பற்றி இன்னொருத்தியிடம் சொல்வது இல்லை; அதுவும் குற்றம் குறை சொல்வது கிடையாது. பெண்களிடம் குறை கண்டு வெளியில் சொல்லித் திரிகிறவன் அற்பன். கெடு கெட்டவன். அவன் மனித இனத்தில் பதர். எதற்கும் உதவாதவன். அப்படிப்பட்ட வர்களை, நான் மனித இனத்திலேயே சேர்க்கமாட்டேன். என்னிடம் உள்ள இந்தக் குணந்தான் சிநேகிதிகளுக்குப் பிடித்தமானது போலும் என்று நினைக்கிறேன். அப்புறம், அவர்கள் மனசைத் திறந்து, தங்களின் ஆசாபாசமெல்லா வற்றையும் சொல்லக்கூடியவன் என்று நம்பினார்கள். அதுதான் என் பாக்கியம். நான் பெற்றதிலேயே பெரும் பேறு. ஆசை காதலுக்கும் அன்பு கணவனுக்கும் கிடைக்காதது. அதற்காக என் சிநேதிகளுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொண்டே இருக்கிறேன்.

நன்றி என்றால் வார்த்தையில் சொல்வது இல்லை. கைகூப்பி வணக்கம் தெரிவிப்பது இல்லை. இன்னொரு மனசுக்கு சொல்வது. அங்கு பேச்சே கிடையாது. காதல், நேசம் என்பது பேச்சை ஒழித்தது. சொல்லற்றது. ஏனெனில் பேச்சு சொல் எல்லாம் இல்லாமல் இருந்து பின்னால் கண்டுபிடிக்கப்பட்டது. சொல் இல்லாத, பேச்சு அற்ற ஒரு காலம் இருந்தது. அதை எல்லா காலம்போல ஒரு காலம் என்று சொல்ல முடியாது. அது



சுபிட்சமான காலம். ஆணும் பெண்ணும் கூடி களித்துக் கொண்டிருந்த காலம். களித்திருக்கவே அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனந்தக் களிப்பு. கலவியில் காலம் கரைந்துகொண்டு இருந்தது.

நான் என் சிநேதிகளோடு சுபிட்சமான காலத்தை பற்றி - சுபிட்சம் என்பதின் சூத்திரத்தைப் பற்றி சொல்ல ஆரம்பித்தேன். நான் சொல்லச் சொல்ல சுவாரசியம் கூடி விட்டது. மதனின் சாம்ராஜியத்திற்கு எல்லோரும் வந்து சேர்ந்துவிட்டார்கள். அங்கே கறுப்பு, சிவப்பு என்ற பேதம் கிடையாது. கிழவி, குமரி என்ற வித்தியாசம் இல்லை. யார்க்கும் யாரும் சொந்தமில்லை என்பது போல யார்க்கும் யாரும் பகை இல்லை. ஏற்பு, நிராகரிப்பு என்பது எல்லாம் கிடையாது. இன்புற்று இருப்பதே வாழ்க்கை.

நான், சொன்ன கதைகளால் வசீகரிக்கப்பட்டு ஏராளமானவர்கள் கூடிவிட்டார்கள். நானே அப்படி ஒரு கூட்டத்தை எதிர்பார்க்கவில்லை. திகைத்துப்போய் விட்டார்கள். அதுதான் அவர்கள் நற்பண்பு. எது சந்தோஷம் கொடுக்கிறதோ - எங்கே அவர்களின் அந்தராத்மா மெச்சப் படுகிறதோ அங்கே சரணாகதி அடைந்து விடுகிறார்கள்.

தத்துவங்களிலேயே மகத்தான தத்துவம் சரணாகதிதான். கடவுளிடம் சரணாகதி அடைவதைவிட, சிநேதிகளிடம் சரணாகதி அடைவது உத்தமம். அது உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாதவர்கள் திருக்கூட்டம். எனக்கு கூட்டத்தில் இருந்த ஒவ்வொருத்தி பெயரும், பெருமையும், உடலும் தனித்தனியாகத் தெரிந்தது. நானே தெரிந்துகொண்டேன் என்பதைவிட அவர்கள் எனக்குத் தெரிவித்தார்கள். யாரிடம் நம்பிக்கை வருகிறதோ அவர்கள் மீது பிறகு சந்தேகம்

கொள்வதில்லை. முழுதாக சரணாகதி அடைகிறார்கள். தங்களை அற்பணித்து கொள்கிறார்கள். நீரோடு பாலென கரைந்து போகிறார்கள்.

சூதும், வாதுங் கொண்ட அற்ப மனிதன் சிநேகிதியின் அந்தராத்மாவை புரிந்துகொள்ள தகுதியற்ற கழிசடை சிநேகிதர்களிடம் சிநேகிதிகளைப் பற்றி நிந்தனை செய்கிறான். தன்னுடைய பிரபல்யத்தையும், தன் சாகசத்தால் சிநேகிதிகளை வீழ்த்திவிட்டதாகத் தம்பட்டம் அடித்துக்கொள்கிறான். அதில் சிறிதளவுகூட உண்மை கிடையாது. அதுதான், உண்மை என்பதின் சரித்திரம்.

சரித்திரம் என்பது நடந்துபோனதைச் சொல்வது இல்லை. அது இறந்தகால நினைவு குறிப்பு கிடையாது. நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. எது நிகழ்கிறதோ அதுவே சரித்திரம். சரித்திரத்தில் சில பகுதிகள் எழுதப்பட்டு இருக்கிறது; பல பகுதிகள் எழுதப்படாமல் இருக்கிறது. எழுதப்படவில்லை என்பதற்காக சரித்திரம் இல்லை என்பதாகிவிடாது. எழுதப்பட்ட சரித்திரத்தைவிட எழுதப் படாத சரித்திரந்தான் முக்கியமானது. அது எழுதப்படும் போது ஏற்கனவே எழுதப்பட்ட பொய் சரித்திரத்தை தூர தள்ளிவைத்துவிடும். மெய் பொயை ஒழித்துக்கொண்டே வருகிறது. அதுதான் சரித்திரமாக இருக்கிறது.

வன்முறையாளர்கள், வாளெடுத்தவர்கள் கத்தி தூக்கியவர்கள், துப்பாக்கி எடுத்தவர்களின் கதை முடிந்து போய்விட்டது. அவர்கள் போட்டுக்கொண்டிருந்த மாவீரன் என்ற முகமூடி கிழிக்கப்பட்டுவிட்டது.

எத்தனையோ ஆண்டுகளாக சரித்திரம் என்பதின் மீது பரந்து இருந்த கசடு தொலையத் தொடங்கிவிட்டது. ஒன்றுமில்லாதவன்; எதற்கும் லாயக்கற்றவர்கள் என்று



கடைசியிலே ஒதுக்கி வைக்கப்பட்டு இருந்தவர்கள் எல்லாம் முதல்வரிசைக்கு வந்துகொண்டு இருக்கிறார்கள். எது நிகழவேண்டுமே அது நிகழ்கிறது. எதனாலும் அதைத் தடுக்கமுடியாது. அதில் ஆண்கள்தான் என்றில்லை. என் பிரிய சிநேகிதிகள் முன்னே வருகிறார்கள். அவர்களின் முகம், வசீகரமும் வனிப்பும் கொண்ட முகம் என் கண்களுக்குத் தெரிகிறது. அவர்களுக்கு முன்னே நான் பரிபூரண சரணாகதியடைந்து விடுகிறேன். அதாவது தண்ணீரில் பால் கலப்பது மாதிரி; நீரில் உப்பு கரைவது மாதிரி கரைந்து போய் விடுகிறேன். நான் என்றும் இல்லாமல் போவதால் இருக்கிறேன். அதாவது நான் இருப்பதால் அவர்கள் ஜீவிக்கிறார்கள்.

“எங்கு நீ இல்லையென்று நினைக்கிறாயோ அங்குதான் நீ இருக்கிறாய்” என்பது என் தத்துவம். தத்துவம் படித்து வருவதில்லை. வாழ்க்கையின் இருந்து தானாக வருவது. எது வழிநடத்தி செல்கிறதோ அதுதான் தத்துவம். தயிரில் இருந்து, வெண்ணை எடுப்பது மாதிரி அலசி அலசி வாழ்க்கையில் இருந்து தத்துவத்தை எடுக்கிறார்கள்.

சிநேகிதிக்கு சிநேகிதன் தத்துவம். சிநேகிதனுக்கு சிநேகிதி தத்துவம். அறிந்துகொள்வதைவிட வாழ்வது மேலானது. அறிவதால் ஆவதென்பது ஒன்றுமில்லை. அறிந்ததால் நானே சொல்கிறேன்.

## 7

தலைக் காவிரிக்கரையில் நின்றுகொண்டு வானமண்டலத்தைப் பார்க்கும்போது எனக்கு அதுதான் தோன்றியது. காவிரி

கடலோடு கலப்பதை ஞானசம்பந்தத்தோடு பார்த்தபோது எனக்கு முன்னே நடந்த தெல்லாம் நினைவிற்கு வந்தது.

காவிரி முன்துறையில நாவாய்கள் வந்து நின்ற பாரைய இறக்காமல் நாவாய்கள் உள்ளே வந்ததைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். அது மாலைப்பொழுது பட்டினப்பாக்கத்தில் கடற்கரையை ஒட்டி இருந்த கலங்கரை விளக்கம் ஒளிவீச ஆரம்பித்தது. யவனர்களும் யவனிச்சிகளும் நன்மாண் தேறல் பருகிவிட்டு கைகோர்த்தபடி நடந்துகொண்டு இருந்தார்கள். யவனச் சேரியில் ஒரு பெரும்கூட்டம் காணப்பட்டது. காழகத்து கறியும் ஈழத்து உணவும், கங்கை ஆக்கமும், கொற்கை முத்தும் வாங்கிப்போக வந்த யவவர்கள் என தெரிந்து கொண்டேன். அவர்கள் பேச்சின் சப்தம் காதை அடைத்தது.

எனக்குத் திடீரென்று தலைக்காவிரியைப் பார்க்க வேண்டுமென்ற ஆசைவந்துவிட்டது. நான் ஆசைப் படுவதைத் தள்ளிபோட மாட்டேன். ஆசைப்படுவதே அடைவதுதான். ஆசைப்படப்பட வாழ்க்கை அர்த்தம் பெறும். நான் ஆசைப்படுகிறவன். ஆனால் பேராசைக் காரனில்லை. அதன் காரணமாக எப்போதும் நிறைவோடு இருக்கிறேன்.

"ஞானசம்பந்தம், தலைக்காவிரிக்குப் போகலாமா?"

"எனக்கு ரொம்ப ஆசை"

"ஆசையை அடக்கக் கூடாது"

"ஆமாம்"

"நாளைக்கு தலைக்காவிரிக்குப் போகலாம்"



"நாளைக்கா"

"உனக்கு வேலை இருந்தால், நான் புறப்படுறேன்."

ஞானசம்பந்தம் நல்ல மனிதன். நல்லவன் எல்லாம் வல்லவனாக இருப்பதில்லை. அது அவசியமும் இல்லை. உலகத்தில் எல்லோர்க்கும் இடமுண்டு. ஒருத்தன் இன்னொருத்தன் மாதிரி இருக்கக்கூடாது. முடியாது என்பது அவசியம் இல்லை. நான் இன்னொருவன் இல்லை என்பது மட்டுமல்ல, யார் மாதிரியும் கிடையாது. நான் தாத்தா தியாகராஜ முதலியார் என்றால் அவராக இல்லை. ஒன்றுக்கு மாற்றாக இன்னொன்று கிடையாது. எது இருக்க வேண்டுமோ அப்படி இருப்பது.

தலைக்காவேரிக்கு ஞானசம்பந்தம் வரமுடியவில்லை. அவன் என்னவோ காரணம் சொன்னான். அது என் மனசில் ஏறவில்லை. அவன் இல்லை. அது மட்டுந்தான் மனசில் ஏறியது. நான் எதற்கும் துணைசேர்க்கிற ஆளில்லை. எப்போது தனியாள். தனிமைதான் வாழ்க்கையில் அற்புதம். கூட்டத்தில் தனியாக இருக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். தனியாக இருக்கும்போது கூட்டத்தில் இருப்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். புரியப்புரிய வாழ்க்கைச் சுகப்படும்.

நான், எப்பொழுது சுகவாசி. எனக்கு சிரமம், கஷ்டம் என்பதே கிடையாது. கிடையாது என்பது மட்டுமல்ல, தெரியாது.

பாரிஜாதம் நான் பேசுவதைப் பார்த்துவிட்டு வாயடைத்துப் போனாள். அவளை ஆச்சரியப்படுத்த; பிரமிப்படைய ந[illegible] பேசவில்லை. அவளைப் பார்த்ததும் பேச தோன்றி[illegible]வள் சௌந்திரியத்தில் என்னை